விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | ஆனி 31 | ஷவ்வல 26 | இதழ் 155
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 15-7-1985

## புறக்கோட்டைக் கடையொன்றில்
# 22 லட்சம் ரூபாய்க் கொள்ளை

(புறக்கோட்டை)

புறக்கோட்டை பிரதான வீதியிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனமொன்றிலிருந்து 22 லட்சம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

'பேஹிட்ஸ்' என்ற நிறுவனத்திலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் வர்த்தக நிறுவனத்துக்குள் மனேஜர் உட்பட நான்கு ஊழியர்கள் ரூபா நோட்டுக்களை எண்ணிக் கட்டிக்கொண்டிருந்த சமயம், பின் கதவுப் பக்கமாக வந்த இனந்தெரியாத மூன்று இளைஞர்கள் அவர்களைத் தாக்கி துப்பாக்கி முனையில் கயிற்றால் கட்டிவிட்டு 22 லட்சம் ரூபாவையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையடித்தவர்கள் அங்குள்ள இரும்புப் பெட்டியை உடைத்து அதற்குள்ளிருந்த பணத்தையும் எடுத்தார்களாம்.

கடந்த பல வருடங்களுள் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களில் இதுவே மிகப் பெரிய கொள்ளைச் சம்பவம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் அதிபர் கனகரத்தினம் தலைமையில் உதவிப் பொலிஸ் அதிபர், பொலிஸ் இன்ஸ்பெக்டர், சார்ஜன்ட், கான்ஸ்டபிள்கள் கொண்ட கோஷ்டியொன்று கொள்ளையடித்தவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தில் துணிவகைகள் விற்பனைசெய்யும் பகுதியில் மாத்திரம் சுமார் 75 பேர் வேலைசெய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (யா)

## இனப்பிரச்னை குறித்து பூட்டானில்
# அதிகாரமற்ற முறையில் தொடர்ந்து ஆலோசனை!
## இலங்கைக்குழு திரும்புவதில் தாமதம்

(கொழும்பு)

பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட இலங்கை அரசின் பிரதிநிதிகள்குழு உடனடியாக இலங்கை திரும்பாமல் தொடர்ந்தும் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஆலோசனைகள் நடத்தி வருவதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது.

மகாநாடு அடுத்த மாதம் 12-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள போதிலும் இலங்கைக் குழுவினர் இலங்கை திரும்புவதற்குமுன் மகாநாட்டில் பங்குபற்றும் தமிழ் அமைப்புக் குழுக்களின் கருத்துக்கள் எந்நிலையில் உள்ளன என்பதை தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள முயன்று வருகிறார்கள்.

இதற்கு இந்திய அரசின் வெளியுறவு செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியும் திம்புவிலேயே தங்கியிருந்து உதவி வருவதாகத் தெரிகிறது.

திரு. பண்டாரி தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளோடும் இலங்கைக் குழுவினரோடும் ஆலோசனைகள் கலந்து இருபகுதினரையும் ஒரு சுமுக முடிவுக்குகொண்டுவர முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இலங்கைக்குழுவினர் ஏற்கனவே முன்வைத்த ஆலோசனைகளை தமிழ் அமைப்புக்கள் நிராகரித்து விட்டமையால் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைமையைச் சீர்செய்து ஏதாவது நியாயமான அடிப்படையில் பேச்சுக்களைத் தொடரச் செய்வதற்கு திரு பண்டாரி முயல்வதாகக் கூறப்படுகிறது

இலங்கைக் குழுவின் தலைவர் திரு. எச் டபிள்யு ஜயவர்தன ஏற்கனவே கொழும்புக்குத் திரும்பவிருந்தபோதிலும்அவர் தமது பயணத்தைப் பின்போட்டுள்ளார், தமது குழுவினருடன் இரண்டொரு தினங்களில் அவர் கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### புதிய யோசனைகள்

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களின்போது இலங்கை அரசின் சார்பில் புதிய யோசனைகள் முன்வைக்கப்படலாம் என்றும், அதற்கு உதவியாக இருக்கும்வகையில் தமிழ் அமைப்புக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை உத்தியோகப்பற்றற்ற முறையில் அறிந்துகொண்டுவர இலங்கைக் குழுவினர் முயன்றுவருவதாகவும் கூறப்படுகின்றது.

## நினைவஞ்சலி சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

'ஓராண்டு நினைவஞ்சலி' என்ற தலைப்பில் ஞானச்சந்திரமோகன் (காப்டன் ரஞ்சன்) என்பவரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் யாழ். குடா நாடெங்கும் காணப்படுகின்றன.

'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தின்சின்னம் பொறிக்கப்பட்ட இச் சுவரொட்டியில் கவிதை நடையில் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. (மா)

## பாக். சதித்திட்டம்
# 7 ராணுவ வீரர்களுக்கு சிறைத்தண்டனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியாவுல்ஹக்கின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சதித்திட்டமிட்டார்கள் என்றகுற்றச்சாட்டின் பேரில் 7 இராணுவ அதிகாரிகளுக்கு நீண்ட காலசிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த 7 இராணுவ அதிகாரிகள் மீதான விசாரணைஇரகசியமானமுறையில் நடைபெற்றதையடுத்து அந்நாட்டிலுள்ள மக்கள் அடிப்படை இயக்கம் இந்தவிசாரணைகுறித்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இந்த இராணுவஅதிகாரிகள் பாகிஸ்தான் ஜனாதிபதியைக் கடத்துவதற்கும், மற்றும் பாகிஸ்தானிலுள்ள இராணுவ அதிகாரிகள், அமைச்சர்கள் முதலியோரின் இல்லங்களை குண்டுவைத்து தகர்த்தபின்னர் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு திட்டமிட்டிருந்தார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது (து)

# ஆறு தமிழ் அமைப்புகளும் கூட்டறிக்கை தாக்கல்

(திம்பு)

பூட்டான் தலைநகரான திம்புவில் நடைபெற்று வந்த இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பான மகாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆலோசனைகளை நிராகரித்த தமிழ் அமைப்புகள் ஆறும் தமது கருத்தை விளக்கி கூட்டறிக்கையொன்றை மகாநாட்டில் சமர்பித்துள்ளன.

இந்த அறிக்கையை ஆறு அமைப்புக்களின் சார்பில் 'புளட்' டைச் சேர்ந்த திரு. சார்ள்ஸ் மகாநாட்டில் சமர்ப்பித்தார்.

மகாநாட்டில் நடந்த வெள்ளிக்கிழமை தமிழ்ஈழவிடுதலைப் புலிகளுக்கான பிரதிநிதி அன்ரன் பேசும்போது, விடுதலைப் பேராளிகளை ஆயுதம் ஏந்த வைத்ததே அரசுதான். நாம் இங்கே எதையும் இரந்து கேட்க வரவில்லை. நாம்எமது நோக்கங்களை அடைவதற்கான போராட்டங்களில் இப்போதும் ஈடுபட்டே இருக்கிறோம் ஈழக் கோரிக்கை விடயத்திலும் நாம் இன்னும் சம்பந்தப்பட்டே இருக்கிறோம்' என்றார்.

மகாநாடு ஒத்திவைக்கப்படுவதற்கு முன் அவர் மகாநாட்டில் மேலும் கருத்து வெளியிடுகையில், 'சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றுபட்டு அமைதியாக வாழ்வதுதான் நோக்கமானால் கொழும்பிலிருந்து மாநாட்டிற்கு புதிய ஆலோசனைகள் அனுப்பிவைக்கப்பட வேண்டும், என்றார்.

'இந்த மகாநாட்டில் திரு. எச். டபிள்யூ ஜயவர்த்தன சமர்ப்பித்த ஆலோசனைகள் தமிழ் மக்களை கேலிக்குள்ளாக்குவதாய் உள்ளன என அவர் குறிப்பிட்டார்.

### தமிழ் அமைப்புக்குழுவின் கூட்டறிக்கை

வெள்ளிக்கிழமை நடந்த மகாநாட்டில் ஆறு தமிழ்

(9ம் பக்கம் பார்க்க)

## சாதாரண தொண்டர்களுக்கும்
# ராணுவப்பயிற்சி!
## கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

"தமிழ்த் தீவிரவாதிகள் வடக்கு. கிழக்கு பகுதிகளில் அரசாங்க நிர்வாக அமைப்பை சீர்குலைப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருவதால் சாதாரண தொண்டர்களுக்கும் இராணுவப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்"

இவ்வாறு கல்வி, வேலை வாய்ப்பு இளைஞர் விவகார அமைச்சர் திரு. ரணில் விக்கிரம சிங்கா மாத்தறைமாவட்டத்திலுள்ள இராணுவ பயிற்சி நிலையத்தில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

ஆயுதப் படையினருக்கும் பொலிஸாருக்கும் விஷேட பயிற்சி அளிப்பதற்காக நாட்டின் பல பாகங்களிலும் மேலும் பல பயிற்சி முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். (து)

## தமிழ் பிள்ளைகளுக்கும் பொலிஸ் பயிற்சிகிடைக்குமா?
### மாணவர்கள் கேள்வி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு பொலிஸ் பயிற்சி அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கும் அவ்வித பயிற்சி அளிக்கப்படுமா என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது

கடேற்ஸ் பயிற்சி பெற்று வந்த வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள கல்லூரி மாணவர்கள் தொடர்ந்தும் அவ்வித பயிற்சி பெறக்கூடாதென்று இடைநிறுத்தம் செய்யப்பட்டது தெரிந்ததே.

இந்த நிலையில் எப்படி வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பொலிஸ் பயிற்சி அளிக்கப்படும் என்று மாணவர் பிரதிநிதி ஒருவர் கேட்கிறார். (மா)

# விளம்பரம்

## விற்பனைக்கு

டெமி காவ் சைஸ் பிளேட்டன் பிறிண்டிங் மெசின் (விக்ரோறியா மொடல்) காலால் இயக்கக் கூடிய ஸ்ரேப்ளர் மெஷின் [அப்பியா சக்கொப்பி கட்டுபவர்களுக்கு உகந்தது] விற்பனைக்குண்டு ஈகிள் அச்சகம், 161, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 4394

நல்ல நிலையிலுள்ள CD 70 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விஷ்ணு கார் பாட்ஸ், இல: 148, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23815. [4415]

காரைநகரில் சிறிதுகாலம் பாவித்த வீட்டு நிலைகள், கதவுகள். யன்னல்கள், யன்னல் கதவுகள், பனை மரங்கள், தீராந்திகள், நெல்லுப்பத்தாயம், பீப்பா வண்டில், மாட்டுத்தொழுவம் முதலியன விற்பனைக்குண்டு தொடர்பு: சி, இராசரத்தினம், 150, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4399

'Star' பிரூன்ட் Sweets மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M G M Stores, 777. K K S Road and 208, 1-St Crose Street, Jaffna. 4436

## காணவில்லை

ஆழ்ந்த கவலைக்குள்ளாயிருக்கும் திருமதி பி எவ். மோகன் என்பவரின் பெயரிலுள்ள ஜீரோ பாங்க் 50 பவுண் வெளிநாட்டுக் காசோலை வீதியில் தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர் இல: 11, சென். ஜேம்ஸ் வீதி, குருநகர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4456

மாம்பழச் சந்திக்கும் முள்ளி சந்திக்கும் இடையில் இம்மனுவேல் ஐரிஸ் கமில்ரன் ஜான்சன் நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை என்னும் விலாசமிடப்பட்ட அடையாள அட்டை 11-7-85-ல் தவறிவிட்டது கண்டெடுப்பவர்கள் மேற்படி விலாசத்திற்கு அனுப்பவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 4450

## மணப்பந்தல்

யாழ். வேளாள குலத்தைச் சேர்ந்த 28 வயதுடைய 7-ல் செவ்வாய் உள்ள A/L, Stem பாஸ்செய்த, ஆங்கில ஆசிரியையாக உத்தியோகம் பார்க்கும் நற்குணமுள்ள பெண்ணிற்கு, உயர்ந்த உத்தியோகம் பார்க்கும் நற்பண்புள்ள மணமகன் தேவை. சீதனமாக வீடு வளவு, ரொக்கமும் நகையும் கொடுக்கப்படும். வெளிநாட்டில் வேலை செய்பவரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல: 4444, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4444

## Wanted

Doctor M B B S., for short term assignment.

SECRETARY
Jaffna Private Hospitals,
394, Navalar Road,
Jaffna. 4449

## தேவை

பல இன கோழிகளும் இறச்சிக்குத் தேவை கிலோ 30ரூபா வரை நேரில் வந்து பெற்றுக் கொள்ளப்படும் விபரங்களுக்கு ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4420

இந்து வேளாளர் குலம், 36 வயதான, அரசாங்கத் துறையில் கடமையாற்றும், தீய பழக்கங்களற்ற பட்டதாரிக்கு, செவ்வாய்க் குற்றமுள்ள மணமகள் தேவை. 2, 4 எண்காரர் விரும்பப்படுவார். இத்துடன் அரசதுறையில் ரூபா 1000/-சம்பளம் பெறும் 38 வயதுச் சகோதரியுடனை மாற்றுச் சம்பந்தம்பற்றிய விண்ணப்பங்கட்கு விசேட கவனம் தரப்படும். தயவுசெய்து சாதகக் குறிப்புகள். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4428, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். (4428)

## வகுப்புகள்

8 முதல் 11 வரை G. C. E. O/L 85 மீட்டல் வகுப்புகள் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள். விபரங்களுக்கு:- இலங்கை பவனம், No:280, ஆடிய பாதம் றோட், நல்லூர். 4457

## தவறிவிட்டது

நவாலிவடக்கு நாச்சிமார் கோவிலடி மானிப்பாய் என்ற விலாசத்தில் வசிக்கும் ஆறுமுகம் கிருஷ்ணகுமார் என்பவரின் அடையாள அட்டையும் சுன்னாகம் மின்சாரசபையின் அறிமுக அட்டையும் கடந்த வெள்ளியன்று தெல்லிப்பளைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் மேற்படி விசாசத்திதுக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். 4451

## சேவை

நாட்பட்ட எவ்வருத்தமானாலும் விசேஷ வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்ட எவ்வித நோய்களானாலும் இறைவனின் அருளால் குணமாக்குவோம். உங்களின் எவ்விதமான தனிப்பட்ட வைத்தியப் பிரச்னைகளுக்கும் வெளிநாடுகளில் பிரபல்யம் மிக்கவர் இலவச ஆலோசனை வழங்குவார். அத்துடன் மனிதசக்தியால் குணப்படுத்த முடியாத சகலவிதமான தோஷங்களையும், பிணிகளையும் நீக்கிக் கொள்ள இயந்திரத்தகடுகள் துவாக்கள் செய்து கொடுக்கப்படும். "சாஹிஷீபா" ஆத்ம ஆத்ம ஆரோக்கிய நிலையம், 125, கடற்கரைவீதி, (பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) குருநகர், யாழ்ப்பாணம். 4380

## தவறிவிட்டது

எனது அலோசியஸ் இம்மானுவல் ஞானப்பிரகாசம் என்ற பெயருடைய பாஸ்போட்டை 782 இலக்க யாழ்-காரைநகர் மினிபஸ்ஸில் தவறவிட்டுள்ளேன். கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். சுப்பர் மார்க்கட் அசோகன்ஸ் பிடவை ஸ்தாபனத்தில் ஒப்படைக்க வேண்டுகிறேன். சன்மானம் வழங்கப்படும். 4458

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

கைதடி நுணுவில் - சாவகச்சேரி காலமசென்ற வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் என்பவரின் மரணச் சொத்துக்கள் உடமைப்பொருட்கள் ஆகியவற்றின் விடயமாக,

(மரணம் எய்தியவர்)

வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் கைம்பெண் புஸ்பமலர். (இரத்தினம் மகள்) கைதடி - நுணுவில், சாவகச்சேரி.

மனுதார்

இல. 220/ரீ
சொத்துறுதிசார்.

எதிராக

பராயமற்றவர்:
1. வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் மகள் சிவதர்சினி (6 வயது)

பராயமற்றவர்:
2. வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் மகன் நிமலதாசன் (5 வயது)

பராயமற்றவர்:
3. வேலுப்பிள்ளை சங்கரலிங்கம் மகன் மாயவன் (2-1/2 மூவரும் பராயமற்றவர்கள். அவர்களின் வழக்குச் காவலராகிய)

4. சதாசிவம் இரத்தினம். மூலமாக எல்லோரும் கைதடி-நுணுவில், சாவகச்சேரி

எதிர் - மனுதார்கள்

குடியியல் சட்டம் 524—532 பிரிவின் முறைப்படியும் (84 ஏ) படிவத்தின்படியும் பின்னுறுக்கட்டளை அறிவித்தல்.

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 9ந் திகதி முற்பகல் 9 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப்பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகிறீர்.
1985ம் ஆண்டு ஆடி மாதம் 10ந் திகதி

நீதிமன்ற கட்டளைப்படி
ஆ. குணநாயகம்
பதிவாளர்.

தயாரித்தவர்:
எஸ். கந்தசாமி ஜே. பி., யூ எம்,
மனுதாரின் சட்டத்தரணி.
4387

## UDUVIL GIRLS' COLLEGE

### Computer Programming and Data Processing in Basic Language

COMMENCING: 1st AUGUST, 1985
Course Includes 30 hours of Practicals

Week Days from 9-00 a. m. to 2-00 p. m.
DURATION - 4 MONTHS

APTITUDE TEST on 30th JULY at 10-00 a. m.
4424

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறித்தல்

யாழ்ப்பாணம் இல. 42, சட்டநாதர் றோட், நல்லூரைச் சேர்ந்த செல்வி சுமதி துரைசிங்கம் என்பவரது மரணசாதனமற்ற மரணச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழ. இல. ரி/ 3897

துரைசிங்கம் கைம்பெண் ஈஸ்வரி இல, 42, சட்டநாதர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்,

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி
கு.குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
செ மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி,
4409

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் இல. 42, சட்டநாதர் றோட் நல்லூரைச் சேர்ந்த செல்வி. தாரணி துரைசிங்கம் என்பவரது மரணசாதனமற்ற மரணச்சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

வழ. இல: ரி/3896

துரைசிங்கம் கைம்பெண் ஈஸ்வரி இல 42, சட்டநாதர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

—மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம்திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு ஆனிமாதம் 4-ம் திகதி

மன்றின் கட்டளைப்படி
கு. குலசிங்கம,
பதிவாளர்.


வரைதல்;
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
4408

## பதில் வட்டாரக் கல்வி அதிகாரி

வேலணை

புங்குடுதீவு வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வ. குலதாசன் இளைப்பாறியமையைத் தொடர்ந்து புங்குடுதீவிற்கு பதில் வட்டாரக் கல்வி அதிகாரியாக வேலணை வட்டாரக் கல்வியதிகாரி திரு பொன். கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஏழாவது நினைவஞ்சலி



சி. ஞானேஸ்வரன்
(இன்பருட்டி)

மலர்வு: 19-9-1958
உதிர்வு: 3-7-1978

எமைப் பிரிந்து ஏழாண்டு மறைந்தாலும் உன் உணர்வுகளும் நினைவுகளும் நாளும் வளர்கிறது

பெற்றோர், சகோதரர்
இன்பருட்டி,
அல்வாய். 4454

## கேள்விப் பத்திர அறிவித்தல்

மன்னார் அபிவிருத்திச்சபை ரூபா 100,000/-க்கு மேல் பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகளை இத்தால் கோருகின்றது

கேள்வி விண்ணப்பங்கள் அபிவிருத்திச்சபையினால் வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களிலேயே அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் படிவங்களை மன்னார் அபிவிருத்திச்சபையின் மாவட்டப் பொறியியலாளரிடம் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 100/- வும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000/-வும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 1985-08-07ந் திகதிக்கு முன்னர் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1985 07.30ந் திகதி முதல் 1985 08 05ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஏழு (07) நாட்களுக்குள் பிணைப்பணம் செலுத்தி வேலைத்தொடங்கிகுறித்த காலத்தினுள் வேலைமுடித்து ஒப்படைக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மன்னார் அபிவிருத்திச்சபையின் வேலைப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலைகளின் விபரம்:

01. சனி, ஞாயிறு திறந்த சந்தைக்கட்டிடவேலை.
02. மன்னார் அபிவிருத்திச் சபை செயலகம் (II) தொடர் வேலை.

கே. பரமேஸ்வரன்.
பிரதிச் செயலாளர் (வேலைகள்),
மன்னார் அபிவிருத்திச்சபை.

மன்னார் அபிவிருத்திச்சபை,
மன்னார்.
1985.07.09. 4375

புற்றுநோய் அபாயம்?

# ஜனதிபதி றீகனுக்கு வயிற்றில் சத்திர சிகிச்சை!

வாஷிங்டன், ஜூலை 14

**அமெரிக்க ஜனதிபதி திரு. றெனுல்ட் றீகனுக்கு வயிற்றுக்குடல் பகுதியில் நேற்று அறுவை சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டது சிறு குடலில் காணப்பட்ட சிறு கட்டி ஒன்றை யடுத்தே அது ஒரு புற்றுநோய் அறிகுறியாக இருக்கமுடியுமா? என்ற சந்தேகத்தின் பேரில் அவ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.**

வாஷிங்டனில் உள்ள கடற்படை வைத்தியசாலையில் இந்த அறுவைசிகிச்சை இடம் பெற்றது. சுமார் 10 பேர் அடங்கிய அறுவை சிகிச்சை நிபுணர்கள்குழு ஒன்றுஇச்சிகிச்சையை மேற்கொண்டது இரண்டு மணி 53 நிமிடநேரம் இச் சிகிச்சை நீடித்ததென்று அறிவிக்கப்பட்டது.

திரு. றீகனின் இச் சிகிச்சையின்போது சிறுகுடலில் சுமார் 2 அடி நீளமான பகுதி வெட்டி எடுக்கப்பட்டது. இதில் ஐந்து செ. மீட்டரின் அளவிலேயே ஒரு 'கட்டி' காணப்பட்டது. இக் கட்டி புற்றுநோய்க்கான அறிகுறியாக இருக்கமுடியுமா என்பதனை அறியும்வகையில் பரிசோதனைகள் இடம்பெற்றன ஆயினும் திரு றீகனின் வயிற்றின் உட்புறப்பகுதியில் புற்றுநோய் ஏற்பட்டிருப்பதற்கான சாயல்கள் எதுவும் தென்படவில்லையென்றுபிரதம அறுவை நிபுணர் தெரிவித்தார்.

சிறுகுடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட கட்டியை உடற்கூறுப்பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாகவும் அப் பரிசோதனையை யடுத்தே அக் கட்டியின் தன்மைபற்றி கூறமுடியுமெனவும் அந்நிபுணர் மேலும் குறிப்பிட்டார்.

சத்திரசிகிச்சையையடுத்து



திரு. றீகன் ஓய்வெடுக்கும் அறைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளார் அங்கு அவர் மயக்கம் தெளிந்து தமது டாக்டருடன் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. றீகன் பத்துத்தினங்கள் வரை வைத்தியசாலையில் இருக்கவேண்டியிருக்கும் அத்துடன் அவரது அறுவை சிகிச்சைக் காயம் ஆறுவதற்கு எட்டு அல்லதுஆறுவாரகாலம் செல்லலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 10ம் திகதி திரு. றீகன் தாம் திட்டமிட்டவாறு தமது விடுமுறையைக் கலிபோர்னியாவில் கழிக்கமுடியுமெனவும் அவரது டாக்டர்கள் தெரிவித்தனர்.

இந்த அறுவைசிகிச்சை காரணமாக திரு றீகன் தமதுகடமைகளை உபஜனதிபதி புஷ்ஷிடம் தற்காலிகமாகக் கையளித்துள்ளார்.

ஜனதிபதி றீகன் அமெரிக்காவில்வயதில்கூடிய ஜனதிபதி என்பது குறிப்பிடத்தக்கது. வயது (74) 1982ம் ஆண்டு இவர் சுடப்பட்டதையடுத்து இரண்டாவது தடவையாக அவருக்கு இச் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது (கி)

---

பாகிஸ்தானில்

## சோவியத் ஹெலிகாப்டர்களுடன் ஆப்கான் வீரர்கள் தஞ்சம்!

இஸ்லாமாபாத், ஜூலை 14

ஆப்கானிஸ்தானிலிருந்து இரு ஹெலிகாப்டர்களில் ஏழு ஆப்கான் விமானப்படையினர் பாகிஸ்தானுக்குள் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சோவியத் தயாரிப்பு 'எம். ஐ எச். 24' ஹெலிகாப்டர்கள் இரண்டிலேயே இவர்கள் பாகிஸ்தானின் மிராஷா என்ற நகரத்தில் வந்திறங்கினர்.

இந்த இரு இராணுவ ஹெலிகாப்டர்களும் சோவியத்யூனியனின் அதிகூடுதல் தொழில் நுட்பங்களைக் கொண்டவையாகும் இது வரை காலமும் இவை மேற்கத்திய நாடுகளின் கண்ணில் படாமலேயே இருந்தன.

ஆனல் நேற்று இவை பாகிஸ்தான் வந்ததன்மூலம் ஒரு நெருங்கிய அமெரிக்க சார்பு நாட்டுக்கு சோவியத்தின் இராணுவ தொழில்நுட்பங்கள் பகிரங்கமாகும் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன

இந்த ஹெலிகாப்டர்கள் ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவ காமாண்டோக்களை ஏற்றி இறக்கவும், கிளர்ச்சியாளர்களின் மறைவிடங்களைத்தாக்கவும் பயன்படுத்தப்பட்டன என்று கூறப்பட்டது

---

### கல்விக் கண்காட்சி

(ஊரெழு)

சுனுகம் நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஒன்றிணைப்புக் கல்விக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

பதில் அதிபர்திரு.மு. நாகேந்திரம் தலைமை வகித்த மேற்படி கண்காட்சி வைபவத்தின் ஆரம்ப நிகழ்ச்சியாக பாடசாலையின் ஸ்தாபகரும், முன்னுள் சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபருமான திரு.வி சிவசுப்பிரமணியம் மங்களவிளக்கேற்றி வைத்தார். மானிப்பாய் வட்டார கல்வி அதிகாரியின் சார்பில் வைபவத்தில் கலந்துகொண்ட இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் திரு சோதி பெருமாள் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

### மோட்டார் சைக்கிள் கடத்தல்

(புலோலி)

புலோலி இளைஞரொருவரின் மோட்டார் சைக்கிள் ஒன்று இயக்கச்சியில் வைத்து இளைஞர்களினல் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப் பட்டது. அரை மணித்தியாலத்தில் திருப்பிக்கொண்டு வந்து தருகிறேம் எனக் கூறிக் கடத்திச் செல்லப் பட்ட மோட்டார் சைக்கிள் ஏழு நாட்களாகியும் திருப்பித் தரப்படவில்லையாம்.

புலோலி தெற்கைச் சேர்ந்த திரு. செ. கருணநிதி என்பவரின் மோட்டார் சைக்கிளே கடத்திச்செல்லப்பட்டதாகும். இந்த மோட்டார் சைக்கிள் கடத்தல் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் உரிமையாளர் திரு. கருணநிதி யாழ். அரசாங்க அதிபருக்கும் பொலிஸிலும் புகார் செய்துள்ளார்.

---

ஆபிரிக்கப் பட்டினி

## இரு நகரங்களில் மாபெரும் நிதியுதவி இசைநிகழ்ச்சி!

லண்டன், ஜூலை 14

ஆபிரிக்காவின் பட்டினி அழிவுகளுக்கு நிவாரணமளிக்கும் வகையில் பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் ஒரேநேரத்தில் மாபெரும் இசை நிகழ்ச்சியொன்று நேற்று நடாத்தப் பட்டது.

'லைவ்எய்ட்' (Life Aid) என்ற இந்த நிகழ்ச்சி பிரிட்டனில் லண்டன் மாநகரத்திலுள்ள 'வெம்பிளி' விளையாட்டரங்கிலும், அமெரிக்காவில் பிலாடெல்பியா நகரிலுள்ள ஜோன் எவ். கென்னடி ஞாபகார்த்த அரங்கிலும் இடம் பெற்றது

லண்டன் நிகழ்ச்சிகளில் சுமார் 70 ஆயிரம் மக்களும், அமெரிக்க நிகழ்ச்சிகளில் சுமார் 90 ஆயிரம் மக்களும் கலந்து கொண்டனர்.

உலகின் மாபெரும் இசைநிகழ்ச்சி என்று வர்ணிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியை சுமார் 150 உலகநாடுகள் ஒலி—ஒளிபரப்பின

முற்றிலும் அமெரிக்க. பிரிட்டிஷ் மேற்கத்தியப் பாடகர்களாலேயே இந்த நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது. இந் நிகழ்ச்சியில் லட்சக்கணக்கில் பணம் அறவிடும் பெறுமதிமிக்க பாடகர்கள் இலவசமாகவே சுமார் பத்து மணித்தியாலங்கள் வரை இந்த நிகழ்ச்சியை நடத்தினர்.

### கன்கார்ட்டில் பாடகர்

இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த பாடகர்களில் ஒருவரான கொலின்ஸ் என்பவர் லண்டனில் தமது நிகழ்ச்சியை முடித்துக்கொண்டபின்னர், அதிவேக 'கன்கார்ட்' விமானத்தில் அமெரிக்காவுக்குச் சென்று இந்த 'லைவ்எய்ட்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

### சோவியத் ஆதரவு

சோவியத் ரஷ்யாவும் இந்த நிகழ்ச்சியை வரவேற்று நிதியுதவி அளித்தது குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது.

இத்துடன் யூகோஸ்லாவியா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் உட்பட மேலும் பல நாடுகள் இந் நிகழ்ச்சியை வரவேற்றன.

ஒரு கோடி பவுண்கள் நிதியை இந்த நிகழ்ச்சிக்கு டுபாய் வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

''அரசியல்வாதிகள் தொழிலதிபர்கள் இதுபோன்ற ஒரு நிதியுதவி நிகழ்ச்சியை ஏற்பாடுசெய்திருந்தால் அதனைச் செவ்வனே செய்திருக்கமுடியாது குளறுபடிகள், மோசடிகள் நடந்திருக்கும் காலதாமதத்தினல் ஆபிரிக்காவில் பட்டினிச் சாவும் அதிகரித்திருக்கும். ஆனல் இந்த இசைக் கலைஞர்கள் கச்சிதமாகத் திட்டமிட்டு வெற்றிகரமாக இந் நிகழ்ச்சியை நடத்தி முடித்தனர்'' என்று பிரிட்டிஷ் பத்திரிகையொன்று பாராட்டியுள்ளது. (கி)

---

இந்திய ஜம்போஜெட்

## கடலில் வீழ்வதற்குமுன்னரே பயணிகள் குண்டுவெடிப்புக்குப் பலி!

### பிரேத பரிசோதனையில் தகவல்

(புதுடில்லி)

அத்திலாந்திக் சமுத்திரத்தில் அண்மையில் விபத்துக்குள்ளான 'எயர்- இந்தியா - 'ஜம்போ ஜெட்' விமானத்தில் பயணம் செய்தவர்கள் விமானம் கடலில் வீழ்வதற்கு முன்னரே குண்டு வெடிப்புக்கு பலியாகியுள்ளனர் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாரிய விமான விபத்தில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட 10 பேரின் சடலங்களை பிரேத பரிசோதனை செய்தபோதே இந்த விபரம் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பிரேத பரிசோதனையின்போது வெளிவந்துள்ள மேலும் சில விபரங்கள் வருமாறு:

விமானத்தில் குண்டு வெடித்த அரை நிமிடத்துக்குள் இவர்கள் இறந்துள்ளனர். விமானம் விபத்துக்குள்ளான போது விமானத்தின் முன்பகுதியை நோக்கி ஒரு விசையான தாக்கம் ஏற்பட்டதினல் இருக்கையில் இருந்தவர் தமக்கு முன்னுலுள்ள இருக்கைகளில் கடுமையாக மோதுண்டதை அடுத்தே மரணம் சம்பவித்துளது.

பிரேத பரிசோதனை செய்யப்பட்ட 130 சடலங்களில் ஒருவரின் சடலத்திலாவது நுரையீரலில் நீர் காணப்படவில்லை. கடலில் வீழ்ந்து இவர்கள் இறந்திருந்தால் நுரையீரலில் தண்ணீர் இருக்கவேண்டும்.

இச் சடலங்களில் எரிகாயம் எதுவும் காணப்படவில்லை கண்ணுடித் துண்டுகளும், உலோகத் துண்டுகளுமே காணப்பட்டன. விமானம் விபத்துக்குள்ளானபோது கண்ணுடிகள் நொறுங்கி இவர்களின் உடலுக்குள் ஏறியிருக்கலாம் என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

இந்த விமானத்தில் பலியான 329 பேரில் 130 சடலங்கள் மாத்திரம் எடுக்கப்பட்டன ஏனைய சடலங்கள் எடுக்கப்படவில்லை இவ் விபத்தில் பலியான இந்தியாவின் பிரபல விஞ்ஞானி நாயுடம்மா 55ம பதிவு ஆசனத்தில் இருந்திருக்கிருர். இவரின் சடலம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை,

ஏயர் இந்திய விமானத்தின் தகவல் ஒலிப்பதிவு பெட்டியை பிரான்ஸ் கப்பல் ஒன்றே கண்டெடுத்தது இந்தக் கப்பல் பிரான்ஸிலுள்ள சர்வதேச கேபிற் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமானது இந்தக் கப்பல் தேடுதல் பணிக்கு ஒரு நாள் செலவு 20,000 அமெரிக்க டாலராகும் இந்தக் கம்பனி இத்தேடுதலின்போது ஏற்பட்ட செலவை மாத்திரமே இந்தியாவிடமிருந்து பெற்றது.

---

## அரிசி விற்பனைப் பணம் கொள்ளை

(வவனியா)

வவனியாவைச் சேர்ந்த மில் முதலாளி ஒருவரிடமிருந்து கனகராயன் குளத்துக்கண்மைப் பகுதியில் வைத்து 25 ஆயிரம் ரூபா ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு அரிசியை எடுத்துச் சென்று விற்றுவிட்டுத் திரும்பிச் செல்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இவர் தமது வானில் வந்துகொண்டிருந்தபோது இரவு ஏழரை மணியளவில் மற்றெருவானில் வந்த ஆறு இளைஞர்கள் ஆயுதமுனையில் அவரிடமிருந்தபணத்தைக் கொள்ளையடித்தனராம்.

## மணிவாக்கு

சர்வேசுவரன் ஒரு நல்ல தோட்டக்காரன். எத்தனை உயிர்வகைகளை, சிறப்பாக மக்களை அவன் படைத்திருக்கிறான். இவை அனைத்தும் அவனுடைய தோட்டமாகிய பிரபஞ்சத்தில் உண்டு.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## 'பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே'

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைக் கொல்வதும், கொழும்பு நகரத்தின் இதயமாகிய கோட்டையை அழிப்பதும் என்ற இரு நோக்குடன் வைத்த 'டைம்பொம்' யாருடைய சதியென்றாலும் அவர்கள் பித்தரே என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பூனை இல்லாத இருட்டறைக்குள் கறுத்தப் பூனையைத் தேடுபவர் எத்தன்மைத்தவர் என்பதைவிளக்க வேண்டுமா?

தமிழ் 'பயங்கரவாதிகள்' மட்டுமல்ல, வேறெந்த அரசியல் தீவிரவாதிகள் தானும் எண்பது வயதை எட்டிநிற்கும் பழுத்த அரசியல் தலைவரை, நாட்டின் முதல் நிறைவேற்று அதிகாரம்படைத்த ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை, எல்லை கடந்த கொந்தளிப்பான காலத்திலும் கொலைசெய்ய எத்தனித்ததாக நாம் கேள்விப்படவில்லை.

அரசியல் முதிர்ச்சியும், சமத்துவபுத்தியுங்கொண்ட ஜனாதிபதி எந்த சர்ச்சைக்குரிய சந்தர்ப்பத்திலும் தமது உயிருக்கு ஆபத்தான தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.

அதே சமயம் உலகத் தலைவர்கள் சிலர் தங்கள் உயிருக்கு ஆபத்து நேரிடாவண்ணம் எடுத்த நடவடிக்கைகள் திறமையற்றதால் கொல்லப்பட்ட அனுபவம், எங்கள் ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு நல்ல படிப்பினையாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

நாம் குறிப்பிடும் குண்டு நாடகம் பித்தரின் விஷமத்தனமாகத் தோன்றினாலும், அக்குண்டு வெடித்திருந்தால் என்னென்ன சேதம் ஏற்பட்டிருக்கும் என்பதை பத்திரிகைகள் பல கணக்குப போடுகின்றன.

வெடிக்காத குண்டு இது என்ற நல்லதிர்ஷ்டத்தையும் வெடிக்குமுன் இதனைக் கண்டு அழிவைத் தவிர்த்த காவற்படையினரையும் பாராட்ட வேண்டும்.

இதற்கு மார்க்ஸியவாத இரு தமிழ் இளைஞர்கள் தாமே பொறுப்பென்றும் தங்கள் இயக்கம், இந்தியப் பிரதமரின் கொள்கைகளை எதிர்த்து இன்று நடக்கும் பூட்டான் பேச்சுக்களை நிராகரிக்கும் நோக்கத்துடன் இந்தக் குண்டுச் சம்பவத்துக்கு உத்தரவிட்டதென்றும் சொன்னதாகப் பத்திரிகைச் செய்தி குறிப்பிடுகிறது.

திம்புவில் தொட்டிலை ஆட்டியும் கொழும்பில் பிள்ளையைக் கிள்ளிவிடுவதும் நிறைவேறவில்லையே.

குறிப்பிட்ட இயக்கத்தின் வேலை இதுவென்றால், ஜனாதிபதியின் கொலைக்கு வகுத்த திட்டம் இவ்வாறு தவறினது எதற்கு?

பத்திரிகைகளில், வானொலியில் உலகெங்கும் காட்டுத் தீபோல் பரவியிருக்கும் இச்செய்திக்கு உப்பு, புளி போன்ற அடிப்படை சுவை ஊட்டும் பண்டங்கள் வேண்டாமா?

அரசு தலைவர்கள், சில வேளைகளில் கொலைக்குப் பலியாவதுண்டு. கொலைமுயற்சியில் தப்பிக் கொள்வதுமுண்டு. எதிரிகளின் சதியே முக்கிய சாதனம் என்றாலும் தப்புவது, ஜனாதிபதி ரீகனைப் போல், பாப்பாண்டவரைப்போல், அதுவும் முதுமையில், தெய்வ நியதியென்றே கொள்ள வேண்டும்.

நாம் குறிப்பிடும் சம்பவம் ஜனாதிபதியின் உயிருக்கு உலைவைக்கும் நோக்கம் கொண்டிருந்தால் அது பித்தரின் முயற்சி என்பது வெளிப்படை. நோயுற்றிருக்கிறார் ஜனாதிபதி என்பதை அறியாதவர் இருவர். ஒருவர் கொழும்புக்கும் பத்திரிகைக்கும் புதிதானவர். மற்றவர் பித்தர். எனவே ஜனாதிபதியின் அலுவலகத்தை மட்டும் அழிக்கும்திட்டம் எத்தகையது?

இன்று நடக்கும் 'திம்பு' பேச்சுக்களை தும்பு தும்பாக இழிக்க, அல்லது எதிர்ப்புத் தெரிவிக்க அல்லது பயங்கரவாதத்தின் 'பொட்டுக் கேட்டை உலகறியவைக்க, இதுபோல் இன்னும் சில பல காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம்.

வெடிக்காத குண்டென்று நாம் அதனை விளையாட்டாக அலட்சியம்செய்வது பொருத்தமாகாது.

இன்று நடைபெறும் ''வாழ்வா தாழ்வா'' என்ற நெருக்கடியை தீர்க்கவல்ல பேச்சுக்களுக்கு இந்தக் 'குண்டு நாடகம்' சாதகமாகவும் இருக்கலாம்.

ஜனாதிபதியின் உயிருக்கு இதுகாறும் இல்லாத அபாயம் இன்று படலைக்கு வந்துவிட்டதென்ற உணர்வு, அநுராதபுரம்போல் ஒரு சமாதான தீர்வுக்கு துரிதப் படுத்தலாம்.

இதற்கு நேர்மாறாக இன்றைய பிரச்னை (சர்வதேச) பயங்கரவாதத்தை ஒழிப்பதே என்று இந்தியா, பாகிஸ்தான் இன்னும் பல நாடுகளையும் அழைத்து, அமெரிக்காவின் தலைமையில் ''கும்பலில் கோவிந்தா'' என்ற கோஷம் எழுப்பவும் உதவலாம்.

குறடும் பேதையும் கொண்டது விடாதென்றாலும் இலங்கைஅரசு இனப் பிரச்னைக்கு எவ்வித ஒளிப்பு மறைப்பின்றி உள்ளத்திலும் வாக்கினிலும் ஒளிபிறக்க சமாதானம் காண்பதற்கு எதனைக்கண்டும் தயங்கவேண்டியதில்லை.

'பிறவியறுக்க நெறிதந்த பித்தரை' சேந்தனார் என்ற அடியார் பல்லாண்டு கூறி வாழ்த்துகிறார். நாட்டைப் பாதுகாக்கவும் மக்கள் நல்வாழ்வு வாழவும் நாம் அதே 'பித்தரை' பல்லாண்டு வாழ்த்துவதோடு, இத்தகைய பைத்தியச் செயல்களில் ஈடுபடும் மனநோயாளரால் கெடுதி உண்டாகாது அவர்கள் குணமடையவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம்.

---

**உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி**

# சர்வதேசபயங்கரவாதம்--அரசபயங்கரவாதம்

## வாஷிங்டன்

அமெரிக்க வழக்கறிஞர் மன்றத்தில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி ரீகன் அண்மையில் நடைபெற்ற அமெரிக்க விமானக்கடத்தல் பற்றிக் குறிப்பிட்டபோது, ''அமெரிக்க மக்களுக்கும் அரசுக்கும் எதிராகப் பயங்கரவாதத்தில் நம்பிக்கைகொண்ட நாடுகள் சில ஒன்று திரண்டிருக்கின்றன. இந்த அபாயத்திலிருந்து நாட்டையும் அனைத்துலகையும் பாதுகாப்பது எமது கடமையும் உரிமையும்'' என்றார்.

இவ்வித நாடுகளைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்ட ஜனாதிபதி தமது புதிய நண்பர் சீரியாவைக் குறிப்பிடவில்லையென்ற கிண்டலும் வெளிவந்திருக்கிறது.

இப்பேச்சில் இலங்கையும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது:

''அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு மாத்திரமன்றி இலங்கைக்கு எதிராக வடகொரியா வன்செயல்களில் ஈடுபட்டுவருகிறது. இலங்கையில் பதற்றநிலையை உருவாக்குவதன் மூலம் தெற்காசியாவில் பதற்ற நிலையைத் தோற்றுவிக்க வடகொரியா முயன்றுவருகிறது'' என்று ஜனாதிபதி பேசியிருக்கின்றார். எனவே சர்வதேசப் பயங்கரவாதத்தை முறியடிக்க நட்பு நாடுகள் அனைத்தும் திரண்டு திட்டம் வகுக்கவேண்டுமென்கிறார் ஜனாதிபதி ரீகன்.

சர்வதேசப்பயங்கரம் என்ற புகாரில்இலங்கை பலியாகிறது என்று எங்கள்இன்றைய ஆட்சி அடிக்கடி சொல்லிவந்தது. ஆனால்ஜனாதிபதி ரீகனின்பகிரங்க அனுதாபத்துக்குஇலங்கை ஆளானது இதுவே முதன்முறையாகும். தென்கொரியாவும் இலங்கையும் அமெரிக்காவின் நண்பர்கள் மட்டுமல்ல, இம்மும்மூர்த்திகளும் இன்று சர்வதேசப் பயங்கரவாதத்துக்கு பலியாகும் நாடுகள் என்ற முறைப்பாடு கவனத்துக்குரியது.

## மாஸ்கோ

'அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிடும் சர்வதேசப் யங்கரவாதம் என்பது அமெரிக்க ஆட்சிக்கு ஆதரவு நல்காத நடுகளை, அரச பயங்கரவாதம் என்ற குற்றத்துக்குள்ளாக்கி அவற்றைத் தாக்கும் திட்டம்'' என்கிறது மாஸ்கோ. எந்த ஆட்சியில் ரீகனுக்கு வெறுப்புண்டோ அதற்கெதிராக அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிடுவதற்குஅமெரிக்கா தயங்குவதில்லை'' என்பதும் மாஸ்கோவின் வியாக்கியானம். மத்திய அமெரிக்கா, ஆபிரிக்கா, தென்கிழக்கு ஆசிய நாடுகள் இதற்கு உதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## கியூபா, நிக்கரகுவா

ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோவும் நிக்கரகுவா அதிபர் ஒற்றேகோவும் ஜனாதிபதி ரீகனின் ஆவேசப் பேச்சைக் கேலிசெய்திருக்கின்றனர். இவ்விரு நாடுகளின் மார்க்ஸிய ஆட்சியே மத்திய அமெரிக்காவின் ஜனநாயக வாழ்க்கை முறைக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு, பயங்கரப் போருக்கு இடமளிக்கின்றதென்கிறார் ரீகன்.

## எல்சல்வடோர்

எல்சல்வடோரில் ஒரு உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. அமெரிக்கா மிண்டு கொடுத்துவந்திருக்கும் பிற்போக்கு ஆட்சிக்கும் அதனை எதிர்க்கும் கெரில்லாப்படைக்கும் நடைபெற்ற மோதலில், நான்கு அமெரிக்க சிப்பாய்களும் இரண்டுஅமெரிக்க வர்த்தகர்களும்கொல்லப்பட்டனர். 13 பேர் கொல்லப்பட்டபோதும், இந்த ஆறு அமெரிக்கரின் உயிர் மகத்தானதென்ற பாணியில்; ''ஜனநாயகம் தாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்'' என்ற ரீகனுக்கு காங்கிரஸ் 12 கோடி 80லட்சம்டொலர்நிதி ராணுவ உதவிக்கு அனுமதித்துள்ளது.

கடத்தல் நாடகத்துக்குப் பின் நடந்த இச் சிறு சம்பவமே ரீகனின் ஆத்திரப் பேச்சுக்குக் காலாக இருந்தது. இதற்கு மத்திய கிழக்கு நாடுகளிலும் கண்டனம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட ஆயுத நடவடிக்கையை லெபனானுக்கு எதிராக ரீகன் திட்டமிட்டிருக்கிறாரென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவிலேயே, ஜனநாயகக் கட்சியினர் ரீகனின் பேச்சு மூன்றாம் உலக யுத்தத்துக்கு ஆரவாரமளிக்கும் சொற்பொழிவு என்று வர்ணித்திருக்கின்றனர்.

### ஆசியாவில் காணப்படுவது எவ்வித பயங்கரவாதம்?

## மலேஷியா

1969-ல் நடைபெற்ற இனக்கலவரத்தில் மலேஷியாவில் வாழும் சீன, இந்திய சமூகத்துக் எதிராக மலே இளைஞர் தாக்குதல் நடத்தினர் இதன் விளைவாக; அந்த நாட்டில் இஸ்லாம் அரச மதம். மலே அரசாங்க மொழி. கல்வியில் தொழிலில் வியாபார விவகாரங்களில் மலே இனத்தவருக்கு முன் உரிமை வழங்கப்பட்டது.

இன்று கிழக்கு மலேஷியா என்று சொல்லப்படும் சாபா என்ற மாநிலத்தில், இஸ்லாமிய ஆதிக்கம் கடந்த தேர்தலில் முறியடிக்கப்பட்டது புதிய ஆட்சியில் முஸ்லிம் செல்வாக்கு பெருமளவிற்குக் குன்றிவிட்டது. தேர்தலில் வெற்றி மட்டுமல்ல, கிளர்ச்சிக்காரரின் வன்செயல்கள் மலேஷிய நாடளாவிப் பரவி வரும் அறிகுறி உண்டு இதற்கு மலேஷிய பிரதமர் மகதிர் மகமது இலகுவில் விட்டுக் கொடுக்கமாட்டாரென்று கருதப்படுகிறது.

இலங்கையைப்போலவெற்றி அடைந்தகட்சி தோல்விகண்ட கட்சியைத் தாக்குவதும், தண்டிப்பதும் வழக்கம். இதுவே முதற்கடமை என்ற அரசியல் மூடத்தனம் இந்த நாடுகளின் நெருக்கடிக்கு ஒரு காரணம். மலேஷியாவின் பொருளாதாரம் குன்றி வருகிறது றப்பர், ஈயம், எண்ணெய்விலை விழுந்து வருகின்றது. எனவே இதனைச் சமாளிக்க இனவாதம் உதவாதது மட்டுமல்ல நிலைமையை மோசமாக்கி விடுகின்றது. மலேஷியாவில் அரசியல் என்றால் இனம், இனம் என்றால் அரசியல் என்ற கொள்கை உண்டு.

கிழக்கு மலேஷிய மாநிலத்தில் நடந்த மாற்றம் பயங்கரவாதச் செயல்களைத் தூண்டிவிடுகிறது. இதற்கு மாறாகத் தீவிர இஸ்லாம் தலையெடுக்க முடியுமாயின், மலேஷியப் பிரதமர் மகதிர் அதனை அடக்க முடியுமென்கிறார். பல இனங்கொண்ட நாடு என்ற கோட்பாட்டில் நாட்டைப் பரிபாலிக்கும் பிரதமர் இஸ்லாமிய அல்லது எதிர் தீவிர வாதத்துக்கு இலகுவில் அனுமதிப்பளிப்பதில்லைஎன்றதிடங்கொண்டவர்.

## ஜப்பான்

ஜப்பானில் அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் இன்னொரு விதம். அரசியலுக்கு நேரடித் தொடர்பு எதுவும் இல்லாதமுறையில், சிக்காகோ பாணியில் நடைபெறும் கொலைகளும் கொள்ளைகளும். ஒரு வேறுபாடு: வர்த்தக ஏமாற்றம் அதிகரித்து வருவதால் அதனைத் தண்டிக்க பாதிக்கப்பட்டவர் சார்பாக பயங்கரவாதக் குழுவினர் நடத்தும் அக்கிரமங்கள் இன்னொரு தினுசுஎன்றே கொள்ள வேண்டும். அண்மையில் 50 000 சிறு முதலீடு காரரின் பணத்தை மோசடிசெய்த ஒரு பல் தொழில் நிறுவனம். தாக்கப்பட்டு அதன் கபட முதலாளி கோரக்கொலைக்குப் பலியானார். இவ்விதமோசடிகள் செல்வம் கொழிக்கும் வர்த்தக மன்னரின் நாடான ஜப்பானில் அதிகரிக்கலாம். இது தடுக்கப்படாவிடில் அரசியல் தாக்கம் ஏற்படலாம்.

## பப்புவா கினி

தென் பசுபிக் நாடாகிய இந்நாடு பத்துவருடம் ஸ்திரமான ஆட்சி கண்டது. இலங்கையிலிருந்து இங்குவந்து பலர் உயர்தொழில் பார்க்கின்றனர். இன்று இங்கும் கொலை, கொள்ளை, பெண்கள் பலாத்காரம் போன்ற அட்டூழியங்கள் பெருகிவருகின்றன அவசரகால ஆட்சி நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

வெளிநாட்டிலிருந்து வந்து தொழில்புரியும் செல்வர்களே இவ்வித பயங்கரச் செயல்களுக்குப் பலியாகின்றனர். சர்வதேச அரங்கில் இதனை அறிமுகப்படுத்துவது பொருத்தமற்றது.

## பிலிப்பைன்ஸ்

'புதிய மக்கள் ராணுவம்' என்ற புரட்சிகர குழுவைச் சேர்ந்தவர்கள், மணிலா அரசின்படைகளுடன் மோதி பல கலகங்களை நடத்துகின்றனர். மார்கோஸ் ஆட்சிக்கு இது ஒரு பெருஞ்சவால். அமெரிக்கா தொடர்ந்துஅவருடைய ஆட்சிக்கு ஆதரவு அளிப்பது கேள்விக்குறி. மக்களின் விரக்திகெரில்லாப் படைகளுக்கு ஆதரவாகும்.

## நேபாளம்

ஆசியாவின் தெய்வமெனப் போற்றப்படும் இமயமலையில் பாதுகாப்பாக வாழ்ந்துவரும் நேபாளத்தில் இன்று நடப்பதென்ன? மன்னர் பிரேந்திராவுக்கு எதிரான அணி ஒன்று திரள்கின்றது. நாட்டில் நிலவும் உணவுப் பற்றுக்குறை, வேலையின்மை, அரசியல் யதேச்சாதிகாரம் போன்ற குறைகள் காரணமாக வன்செயல்கள் அதிகரித்து வருகின்றன மக்கள் ஆட்சிக்கு இடமில்லை போதைவஸ்துக்கள் பரிமாறும் இடமாக நேபாளம் பெயர்பெற்றிருக்கிறது

இமய உயர்வில் கம்பீரமாக காட்சியளிக்கும் இந்த இந்து ராச்சியம் அமைதியின்மையையும், உள்நாட்டுப் பிணக்கையும் கொண்டிருக்கிறது.

## பூச்சாண்டி வேறு பிரச்னை வேறு

சர்வதேச பயங்கரவாதம் என்பது அமெரிக்கா தன்பக்கம் நாடுகளைத் திருப்ப உருவாக்கும் பூச்சாண்டி என்பது மாஸ்கோவின் கருத்து. இதில் உண்மை உண்டு. அதேசமயம் மத்தியகிழக்கு, மத்திய அமெரிக்கா, ஆபிரிக்கா, தென் ஆசியா

(9-ம் பக்கம் பார்க்க)

# கல்லாது கவிபொழிந்த வல்லாளர்
# இராமநாதனை வசீகரித்த குருகவி மகாலிங்கசிவம்



பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் முன்னோர்களுள் மட்டுவில் ஊரில் ஒரு கணபதிப்பிள்ளை வாழ்ந்தவர். அவரின் மைந்தன் வேற்பிள்ளை என்பார் உரையாசிரியர் எனப் புகழ் பெற்றவர். ஆறுமுக நாவலர் அவர்களின் மாணுக்கரை அறிவு விருத்திசெய்தவர். வேற்பிள்ளை அவர்கள் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்திவாலயத்தில் தலைமையாசிரியராயிருந்து பெரியவர் பலரை உருவாக்கியவர். ஈழ மண்டல சதகம் பாடியவர்.

### பாண்டவரில் பார்த்திபன்

வேற்பிள்ளை அவர்கள் புலத்துறை முற்றிய புலவர்கள் வாழ்பதியாய புலோலியில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் அவர்களின் தமக்கையாரை மணந்தவர். பஞ்ச பாண்டவர்களைப் போல மைந்தர் ஐவரைப் பெற்றவர். மைந்தர்களுள் பார்த்திபன் போல நடுவிற் பிறந்தவர் மகாலிங்கசிவம். திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் அண்ணன்மார். கந்தசுவாமி, நடராசா தம்பிமார்.

தம் பிள்ளைகள் எக்காரணங்கொண்டும் ஆங்கிலம் படித்தலாகாது என்பது வேற்பிள்ளை அவர்களின் உத்தரவு. ஆங்கிலம் மிலேச்ச பாஷை என்பது அவர் எண்ணம். தமையன்மாரும் தம்பிமாரும் ஆங்கிலம் பயிலத் துணிந்தார்கள், பயின்முர்கள். மகாலிங்கசிவம் பள்ளிக்கே போகவில்லை: படிப்பு [வீடுதேடி - அவர் நெஞ்சு தேடி - வந்து டணிந்தது - குவிந்தது.

வீட்டில் பார்பதி என்னும் முதிய பாட்டியார் இருந்தார். அவர் திருமணஞ் செய்யாமல் ஔவையார் போல வாழ்ந்தார். அவர் ஔவையாரைப் போல தானும் இரு பெண் குழந்தைகளைக் கல்வி கற்பித்து மதுரைத் தமிழ்ப் பண்டிதைகளாக்கினர். அந்த வாயால பேரன் மகாலிங்கசிவத்துக்கும் பாடம் சொன்னர். ஆத்திசூடி முதலாகப் பழமலை அந்தாதி ஈருக மகாலிங்கசிவம் சிறுவனுயிருந்தபோதே நெஞ்சிற்கொண்டார்.

### கவிதை தானுக வந்தது

வயல் வரம்புகளில் தாவியோடும்போது அவருக்குப் பாட்டுப் பாடவும் வந்தது. அவர் பாடியவற்றை அவரும் எழுதிவைக்கவில்லை, கூடி விளையாடிய நண்பர்களும் எழுதி வைக்கவில்லை.

ஒருநாள் அவர் ஒரு வழியால் போனபோது அங்கே கொன்றை மரநிழலில் வாட்டசாட்டமான ஒரு கிழவன் நெடிய தொடைகளைச் சொறிந்தவாறு காலை நீட்டி இருந்தார். மகாலிங்கசிவம் தம் வழியே மீண்டபோதும் அந்தக் கிழவன் சொறிந்த வண்ணம் இருந்தான். சிவத்துக்குச் சிரிப்புவந்தது. சிரிப்பைத் தள்ளிக்கொண்டு பாட்டும் வந்தது. பாட்டு பெரிய பாட்டு.

"குரங்கே உனக்கு மரந்தடி
தானென்ன குத்தகையோ
சிரங்கே உனக்கு நெடுந்
தொடைதானென்ன
சீதனமோ"

இக்கருத்திலமைந்த பாடலை முற்ருக எவரும் அறியவில்லை.

### பிரசங்க ஆற்றல்

மட்டுவில் செல்லப்பா என்பவர் சட்டத்தரணிகளை வென்ற நிபுணர். "லோ செல்லப்பா" என்பது பெயர். அவர் ஒரு சமயம் சேர் இராமநாதன் அவர்களை மட்டுவிற் கிராமத்துக்கு அழைத்து ஒரு பரிசளிப்பு விழாக் கொண்டாடினர். பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் வழியிற் காவியப் பாடசாலை நடத்தி ஆண்டுவிழாவின் போது தரமான பிள்ளைகளுக்கு சேர் இராமநாதனின் கையால் பரிசு. பெரிய விழா. அதில் வரவேற்புரை மகாலிங்கசிவம். பஞ்சன் தேறு நிகர்த்த மகாலிங்கசிவம் அடக்க ஒடுக்கமாகக் கூட்டுக்காலில் நின்று ஆடாமல் அசையாமல் மேடை மீது பாரியார் சமேதராய்

(6-ம் பக்கம் பார்க்க)

க. சி. குலரத்தினம்

---

17-7-85 புதன்கிழமை ஆடி அமாவாசைத் தினமாகும். மாவிட்டபுரம் கந்தசுவாமி, மட்டக்களப்பு மாமங்கேஸ்வரர் தீர்த்தம். இவற்றினையொட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# பிதிர்த் தேவதைகளுக்கான தினம் - ஆடி அமாவாசை

ஆடி அமாவாசை என்முல் சைவசமயத்தவர்களுக்கு மிகவும் பயபக்தி உண்டாகிறது. ஆடி அமாவாசை சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒரு முக்கியமான தினமாகும். பிதிர் வழிபாட்டைக் குறிக்கும் ஒரு புண்ணியமான சிராத்த தினமாகும். கீரிமலைப் புண்ணிய தீர்த்தத்தில் பெருந்திரளான மக்கள் கூடி நீராடுவர்.

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை—பாகையைக் குறிப்பிடும் ஒரு சொல். 'அமா' என்முல் ஓரிடத்தில் பொருந்தியது (குவிந்தது) என்று பொருள். ஒரு இராசியில் சூரியன், சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும் வாசியான நாள் 'அமாவாசி' எனப்படும். வானமண்டலத்தில் தமது அளப்பு வேலையைச் சிருஷ்டியின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடங்கிய இருவரும் அமாவாசை அரம்ப காலத்திலிருந்தே தொடங்கிய இருவரும் அமாவாசை நாளிலன்றுதான் ஒருங்கு கூடுகின்றனர்.

### இறை பக்தியும் நல்லொழுக்கமுள்ள
### பிதாமாதாக்களை உடைமையே
### பெரும் பாக்கியம்

### பௌர்ணமித் திதி

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும்பொழுது அமாவாசைத் திதி உண்டாகும், சந்திரன் சூரியனிலிருந்து பிரிந்து பூமியைச் சுற்றி வருகின்ற மார்க்கத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் 180-வது பாகையில் வரும் பொழுது பௌர்ணமித் திதி நிகழும்.

திதிகள் பூர்வபக்கத் திதிகள் அபரபக்கத் திதிகள் என இருவகைப்படும். அமாவாசைக்கடுத்த பிரதமை முதல் பௌர்ணமி இறுதியாகவுள்ள 15 திதிகளும் பூர்வபக்கமெனப்படும். பௌர்ணமிக்கடுத்த பிரதமைமுதல் அமாவாசை இறுதியாகவுள்ள 15 திதிகளும் அபரபக்கமெனப்படும். பூர்வபக்கம் அபரபக்கம் என்பன முறையே சுக்லபக்கம் கிருஷ்ணபக்கம், வளர்பிறை, தேய்பிறை எனவும் படும்.

> ஒவ்வொரு அமாவாசையும் பிதிர்க்கருமத்திற்கு விசேடமானது. எனினும் ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் விசேடமுமானதாகும்.

### சூரியசந்திரர்கள்

அமாவாசையின் கருத்தை ஞானமுறையிற் கவனித்தலும் நல்லது. சூரியன் ஞானகாரகன், ஆத்மகாரகன் ஆவான். பிராணிகளின் ஆத்ம அமைப்பு சூரியனுற்தான் நிகழ்கிறது. ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் யாவும் சூரியனுலேயே தோன்றுகின்றன. சந்திரன் மனத்திற்கு அதிபதி மகிழ்ச்சி தெளிந்த அறிவு, உற்சாகம், இன்பம், முதலியன சந்திரனுல் அடையத்தக்கன. இத்தகைய சூரிய சந்திரர் இருவரும் ஒரு ராசியில் சஞ்சரிக்கும் நாள் புனிதமான நாள். உயிர்களின் சுகபோகமாகிய மாறுதலையுணர்த்தும் நாள். சகல தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாவர். அன்று நோன்பு நோற்றலும் விரதங் காத்தலும் சிறந்ததும் இறைவனுக்கு மகிழ்ச்சியளிப்பதும் பெருமை தருவதுமாயிருக்கும்.

### உடம்பின் தத்துவம்

மானுடராகிய நமக்கு இரண்டு சரீரங்கள்-சிவதேகங்கள் உள்ளன அவை தூலசரீரம்; சூக்கும சரீரம்; குணசரீரம் எனப்படும். நமது உடம்பு தூலசரீரம். இது தூலகாயம், தூலதேகம், புறவுடல் எனவும் படும். ஆயுள் முடிவில் முன்னுடல் விட்டு மற்ருெரு உடம்பெடுத்தற்கு ஏதுவாயிருப்பது அருவுடம்பு இது சூக்குமகாயம், சூக்கும தேகம், உள்ளுடம்பு எனவும் படும் இவற்றுள், தூலசரீரமானது பஞ்சபூதங்களாலும், பரிணமிக்கப்பட்ட உரு உடம்பு. சூக்கும சரீரமாவது தன்மாத்திரைகளனைத்தும் அந்தக் காரணங்கள் நான்கும் கூடிய மனோமயகோசத்தினுல் அமைந்தது, அருவுடம்பாகும்.

> பிதாவினுடைய உயிர் ஸ்கந்த சொரூபமாக இருக்கும். பாட்டனுடைய உயிர் சண்ட பதத்திலே சண்ட சொரூபமாக இருக்கும் முப்பாட்டனுடைய உயிர் கணநீச பதத்திலே கணத சொரூபமாக இருக்கும்.

### உயிரின் நிலைத்துவம்

ஒருவர் இறக்கும்போது தூலசரீரம் அழிந்துபோகும். சூக்குமசரீரம் அழிவதில்லை. அவை சர்வசங்காரகாலத்திலே அல்லது முத்திநிலையிலாவது அழியும். ஒரு உயிர் தூல சரீரத்தை விட்டுநீங்கும் போது சூக்கும சரீரத்தோடு செல்லும். அங்ஙனஞ்சென்ற உயிர், பூமியிற்தான் புரிந்த வினைகளுக்கேற்ப இன்ப துன்

(6-ம் பக்கம் பார்க்க)

கனகசபாபதி நாகேஸ்வரன்
துணை விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்

---

# முகோத்ரமகாரதத்தில் மாவை முருகன் நாளை பவனி

மாவிட்டபுரம் அருள்மிகு ஸ்ரீகந்தசுவாமி கோவில் தொன்மைப் பெருமைவாய்ந்த திருத்தலம்.

தெய்வ சாந்நித்யம் துலங்கும் இத்திருப்பதியும், அதில் அருளாட்சி செய்யும் கோலக்குமரனும், தமிழ்ப் பழங்குடி மக்களால் மாருதப் புரவீகவல்லி காலம்தொட்டு மிகவும் போற்றிப் புகழ்ந்து வழிபாடு செய்யப்பட்டுவருவது பிரசித்தமான செய்தியாகும்

வேதாகம நெறிமுறை தவருது, ஆசார அனுட்டானங்களுடன் நன்கு பரிபாலிக்கப் பட்டுவருவதாலும், இத்தலத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் முருகப் பெருமான் சிறந்த வரப்பிரசாதி என்பதாலும், இத்தலத்தின் கீர்த்தி கடல் கடந்து தமிழகம், சிங்கப்பூர், மலாயா, பர்மா போன்ற இடங்களுக்கும் பரவி, ஆண்டுதோறும், ஆயிரமாயிரம் அடியார் பெருமக்களை இந் நாடுகளிலிருந்து தன்னகத்தே ஈர்த்து அருள்பாலிக்கிறது இத் திருத்தலம்.

தனித்துவங்கள் பல நிறைந்த இத்தனிப்பெரும் தலத்திலே, நாளை பிரம்மோத்சவ காலப் பெருவிழாவான பஞ்சரத பவனி நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான அடியார் பெருமக்கள்கூடி வழிபடும் இத்திருவிழாவிலே, சண்முகப்பெருமானும், பரிவார மூர்த்திகளும் பஞ்ச ரதமேறிப் பவனிவரும் திருவோலக்கக் காட்சி இடம் பெறுகிறது.

இத்திருப் பவனியிலே, வாழை, கமுகு, இளநீர், சங்கு, மாவிலை தோரணம், கரும்பு ஆகியவைகளால் அலங்கரிக்கப்பட்ட ஐந்து ரதங்களிலே நடு நாயகமாக, எழில்மிகு தோற்றத்துடன், தேர் மணிகள் கலகலக்கக் கம்பீரமாக நகர்ந்து சண்முகப் பெருமான் அமர்ந்து வரும் திருத்தேர், கண்ணுக்கும் கருத்துக்கும் உணர்வூட்டும் சிறப்புமிகு சித்திரத் தேராகும். பழமை வாய்ந்த இத் தேர் 'முகோத்ர மகாரதம்' என ஆதீனத்தாரால் அழைக்கப்படுகிறது



கண்களையும், கருத்தையும் கவரவல்ல அழகுபொலி சிற்ப சித்திரங்கள் பலிந்த இந்த 'முகோத்ர மகாரதம்' ஒரு கலைப் பொக்கிஷமாகத் திகழ்கிறதென்ருல் மிகையாகாது

சிறப்புமிகு இத்தேரில், சீர் மேவு திருமாவைச் செங்கை வடிவேலவன், கருணை மழை பொழியும் ஓராறு வதனங்களும், அருள் ஒளி பரப்பும் ஈராறு விழிமலரும், மலர்மாலைகள் தாங்கிய பன்னிரு திண்புயமும், அணிமணிகள் ஏந்திய அகண்ட மார்பும், ஈட்டி, கத்தி, வச்சிரம், அம்பு, வில், அங்குசம், கண்டை கமலம், குலிசம், பரசு ஆகிய படைகள் ஏந்திய பத்துக் கரங்களும், அபயவரத கரங்களில் வேற்படையும், கூகுட கொடியும் ஏந்தியவண்ணம் தெய்வ மொழித் திருவாயில் புன்னகை தவழும் தேவியர் இருவருடன், சிக்கி வாகனம் பின்னிற்க, முழுதுமழகிய பெருமனாக பரமருவமும், இளமையும், ஆண்மையும் நிறைந்த பெருமாளாகக் காட்சி தந்த வண்ணம் அணி வீதிவலம் வருவது காண்போர் உள்ளத்தை உருக்கி மெய் சிலிர்க்கவைக்கும் மகோன்னதக் காட்சியாகும்

-பொன். சோமசுந்தரம்.

### கனம் பண்ணல்

"பெரியாரைக் கனம் பண்ணுதல் தமிழ் மரபின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்று மனிதர்களுக்கு மதிப்பளித்துக் கனம்பண்ணி நடப்பது அனைவரதும் தலையாய கடன். உயிர்களது மதிப்பு நிலையினைப் புரிந்துகொள்வதற்கும் தெய்வீகப் பண்பாடு வாய்த்திருக்கவேண்டும்."

வட இலங்கையில், எந்தப் பகுதியிலிருந்தும் எந்த நேரத்திலும் தொலை தொடர்பு கேட்டால், நமக்குக் கிடைப்பது தொலைபேசி இணைப்பல்ல; 'அவுட் ஒப் ஓடர்' என்ற வார்த்தைகள்தான். ஆனுல் இந்தியாவிலோ........

அண்டை நாடான இந்தியா இத்துறையில் கண்டுள்ள முன்னேற்றம் பற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

# தொலை தொடர்பு துறையில் இந்தியாவின் அதிசய வளர்ச்சி

நமது அண்டை நாடான இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு பல்வேறு துறைகளிலும் வேகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. கைத்தொழில், விவசாயம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்தியா அடைந்திருக்கும் வளர்ச்சி வல்லரசு நாடுகளையே பிரமிக்க வைத்திருக்கிறது.

தொலைபேசித் துறையைப் பொறுத்தவரையில் இந்தியா அடைந்திருக்கும் வளர்ச்சி மகத்தானது இந்தியாவைப் போன்ற மிகப் பெரிய அளவு நிலப்பரப்புடன் பல்வேறு முக்கிய நகரங்களைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் நல்லதொரு தொலைபேசிச் சேவையை அறிமுகப்படுத்துவதும், அதைத் திறமையாக நிர்வகிப்பதும் அவ்வளவு இலகுவான ஒரு காரியமல்ல. எமது சிறிய நாட்டில் தொலைபேசிகள் மாதத்தில் எத்தனை நாட்கள்தான் சீராக வேலைசெய்கின்றன? அதுவும் தூர இடங்களுக்கான தொலைபேசிச் சேவைகள் எவ்விதம் சீராக இயங்குகின்றன என்பதை நாம் அறியாமலா இருக்கிறோம்.

### பட்டிதொட்டிமுதல் அராபிக் கடல்வரை

இந்தியா தொலைபேசிச் சேவையை முக்கிய நகரப் பகுதிகளில் மாத்திரம் அறிமுகப்படுத்துவதோடு நின்றுவிடாது. நாட்டின் முதுகெலும்பெனக் கருதப்படும் கிராமப்புறங்களுக்கெல்லாம் அதை எடுத்துச் செல்வதில் தனது தனித்துவத்தைக் காட்டியிருக்கிறது. இத்தோடு நின்றுவிடாமல் நாட்டின் பிராந்திய எல்லைகளுக்கும் வங்காள விரிகுடா, அராபிக்கடல் ஆகியவற்றிலுள்ள தீவுகளுக்கும் தொலைபேசிச் சேவையை இணைத்திருக்கிறது

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும், நவீன தொழில்நுட்ப வசதிகளும் நகரப் பகுதிகளில் வாழும் வசதிபடைத்தவர்களுக்கு மாத்திரம் சொந்தமானவையல்ல. அவை நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் வாழும் ஏழை மக்களுக்கும் சொந்தமானவை என்ற தத்துவத்தை இந்தியா இதன்மூலம் உலகநாடுகளுக்கு உணர்த்தியிருக்கிறது.

இந்தியாவில் தந்திச் சேவையாக ஆரம்பித்த தொலைபேசிச் சேவை இன்று நாட்டின் எந்தப் பகுதியுடனும் நேரடித் தொடர்பு கொள்ளக்கூடிய விதத்தில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. தொலைபேசித் துறையில் தற்போதுள்ள மிக நவீனமான தொழில்நுட்ப முறைகள் இந்திய தொலைபேசித் தொடர்புத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. நீண்டதூர தொலைபேசிச் சேவைகள் செய்மதித் தொடர்பு சாதனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. தொலைபேசித்துறையில் அதிநவீன கண்டுபிடிப்பான எலெக்ற்ரோனிக் சுவிட்ச் முறைத் திட்டத்தின்கீழ் இவை கச்சிதமாகச் செயல்படுகின்றன.

### 48-உம் 84-உம்

1948ம் ஆண்டில் இந்தியாவில் 83 ஆயிரம் பரிவர்த்தனை இணைப்புகள் மாத்திரமே இருந்தன. 1984ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி 26 லட்சத்து 66 ஆயிரத்து 800 பரிவர்த்தனை இணைப்புகள் உள்ளன. அத்துடன் பல்வேறு பகுதிகளிலும் மொத்தம் 10 ஆயிரம் பரிவர்த்தனை நிலையங்களும் உள்ளன.

இத்தனை வளர்ச்சியிருந்தும் 7 லட்சத்து 40 ஆயிரம்பேர் புதிதாகத் தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்காக இந்திய தொலைபேசித் திணைக்களத்துக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். அந்த அளவுக்கு அதன் தேவை அங்கே பெருமளவு அதிகரித்திருக்கிறது.

இந்தியாவின் தொலைபேசி இணைப்புச் சேவை கேபிள், மைக்ரோ வேவ் மற்றும் செய்மதித் தொடர்பு முறைகள் ஆகியவற்றின்மூலம் பல்வேறு பரிவர்த்தனை நிலையங்களுடனும் அதிநவீன தொழில்நுட்ப முறையில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

### சொந்தத்தில் செய்மதி

இந்தியாவின் தூர இடங்களுக்கான தொலைபேசி இணைப்புக்கள் செய்மதித் தொடர்பு மூலம் மேற்கொள்ளப்படுகிறதல்லவா? இந்தியா இதன் பொருட்டுச் சொந்தமாகவே செய்மதியொன்றை வைத்துக்கொண்டிருக்கும் பெருமையையும் பெற்றிருக்கிறது. இந்தச் செய்மதிக்கு 'இன்சட்' (INSAT) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தச் செய்மதி இந்தியாவின் பல்வேறு முக்கிய நகரங்களுக்கும் தொலைபேசிச் சேவைகளைத் திறம்பட வழங்குவதில் முக்கிய இடத்தை வகிக்கின்றது இதேநேரத்தில் நாட்டின் கிராமப் பகுதிகளுக்கும், போக்குவரத்து வசதிகள் இல்லாத பகுதிகளுக்கும் சீரான தொலைபேசிச் சேவைகளை வழங்க இந்தச் செய்மதி பேருதவி புரிகிறது. குறிப்பாகச் சொல்வதானுல் இந்தியாவின் தேசிய ஒருங்கிணைப்புத் திட்டத்தை வலுப்படுத்துவதற்கு 'இன்சட்' செய்மதி தொலைபேசி இணைப்புச் சேவைமூலம் குறிப்பிடத்தக்க சேவை புரிந்து வருகிறது.

இத்தனை நவீன வசதிகள் இருந்தும் தற்போதைய சேவை தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் இல்லையெனவும். திருப்தியாக இல்லையெனவும் கருதப்படுகிறது. புதிய தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்காக அதிகமானோர் விண்ணப்பித்திருப்பதைப் பார்க்கும்போது இது ஊர்ஜிதமாகிறது. அதி நவீன தொழில்நுட்ப முறைகள் மூலம் தொலைபேசிச் சேவை எந்த அளவுக்குச் சீராக இருக்கும் என்பதையும் இந்திய மக்கள் இன்று நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். இதனுல் அந்தத் தரத்திலேயே தமது நாட்டுச் சேவையும் இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர் இன்றைய நிலையில் இந்திய மக்களின் இந்தப் பணியை இந்திய தொலைபேசி நிபுணர்கள் கவனத்தில் எடுத்திருக்கின்றனர்.

### அபிவிருத்திக்கு 2336 கோடி ஒதுக்கீடு

இந்திய தொலைபேசித் திணைக்களம் இதனை அளவுகோலாகக்கொண்டு தொலைபேசிச் சேவையை மேலும் நவீனமயப் படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்து வருகிறது தொலைபேசி சேவையை அபிவிருத்தி செய்வதற்கென ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2336 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது எனினும், தேவைகள் அதிகரித்திருப்பதால் இந்தத் தொகை மிகவும் குறைவாகவே இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது

இதேவேளையில் தெலைபேசி சேவையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக ஏழாவது திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தற்போது அதிநவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதை விட தேவைகளைச் சமாளிப்பதற்கே இத்திட்டத்தில் முக்கிய இடம் வழங்கப்பட்டிருக்கிறது.

### ரெலெக்ஸ் சேவை

தொலைபேசி சேவையுடன் ரெலெக்ஸ் சேவையும் இந்தியாவில் வெகுவேகமாக வளர்ச்சியடைந்துவருகிறது. ற்போது மொத்தம் 24 ஆயிரம் ரெலெக்ஸ் இணைப்புக்கள் உள்ளன. ரெலெக்ஸ் பரிவர்த்தனை நிலையங்கள் ஆறுண்டுத் திட்டத்தின் கீழ் நவீனமயப் படுத்தப்பட்டிருக்கின்றன. அதிநவீன எலெக்ரோனிக் முறையின் கீழ் இயங்கும் ரெலக்ஸ் சாதனங்கள் இதன் பொருட்டுப் பொருத்தப்பட்டிருக்கின்றன.

### தொலைக்காட்சி

ஆறுவது திட்டத்தின் கீழ் தொலைக்காட்சிப் பிரிவும் நவீனமயப்படுத்தப் பட்டிருக்கிறது: கல்கத்தா, டில்லி, பம்பாய், சென்னை ஆகிய முக்கிய நகரங்களுக்கு மைக்ரோ அலைவரிசை மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அஞ்சல் செய்யப்படுகின்றன. நாடு முழுவதும் தூரதர்ஷன் நிகழ்ச்சிகளைத் தெளிவுடன் காண்பிக்கும் நோக்குடன் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது இத்துடன் இன்சட் செய்மதிமூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தெளிவாக அஞ்சல் செய்வதற்கும் தூரதர்ஷனுக்கு நவீன வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஏழாவது திட்டத்தின்கீழ், தொலைபேசி, ரெலெக்ஸ், தொலைக்காட்சி ஆகியவற்றின் சேவைகளை நவீனமயப்படுத்தி அபிவிருத்திசெய்யப் பாரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் ஒன்றுக் கிராம அபிவிருத்தியைப் பிரதானமாகக் கொண்டு கிராமங்களுக்குத் தொலைபேசி இணைப்புச் சேவைகளை விரிவுபடுத்த முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளிலிருந்து நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுக்கும் தொடர்புகொள்வதற்கு வசதியாகப் பொதுமக்களுக்கு எனத் தனியாக நீண்டதூர தொலைபேசி இணைப்பு வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன அத்துடன் கிராமப்புறத் தொலைபேசி இணைப்புச் சேவையில் பல நவீன தொழில்நுட்ப உத்திகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

இந்திய தொலைபேசித் திணைக்களம் நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுவூட்டும் வர்த்தக வியாபாரத் துறையினரையும் மறந்துவிடவில்லை. அவர்களுக்கெனப் பிரத்தியேகமாக நவீன தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. செய்மதிமூலம் இந்தச் சேவை வழங்கப்படவிருக்கிறது ஏழாவது திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படும் வர்த்தக நிறுவனங்களில் செய்மதித் தொடர்பு சாதனங்கள் இதன்பொருட்டு விசேஷமாகப் பொருத்தப்படவுள்ளன. ஏழாவது திடடத்தில் கீழ் தொலைபேசிப் பாவனையாளர்கள் அனைவரையும் திருப்திப்படுத்தும் நோக்கத்துடனேயே பாரிய திட்டங்கள் தயாராகியுள்ளன. இந்தியா விரைவில் தொலைபேசித் தொடர்புத் துறையில் ஒருமுன்னணி நாடாகத் திகழப்போகிறது.

பெஞ்சமின் இராசரத்தினம்

## இராமநாதனை...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வீற்றிருந்த இராமநாத வள்ளலுக்கு வாய்நிறைந்த வாய்மை மொழிகளால் ஒரு வரவேற்பு.

### கோப்பாயில் விரிவுரை

"திருக்கைலாய மலையிலே பார்பதி பரமேஸ்வரன்போல எழுந்தருளியுள்ள......" என்று தொடங்கிப் பேசியமை இராமநாதன் அவர்களை வெகுவாக உருக்கிவிட்டது அடுத்த கிழமை மகாலிங்கசிவம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர். அதன் பின் கோப்பாயிலே விரிவுரையாளர்.

இத்தனை பெறுபேறுகளுக்கும் மகாலிங்கசிவத்தாருக்கு எவ்வித பரீட்சைச் சான்றிதழ்களோ நற்சாட்சிப் பத்திரங்களோ உதவிசெய்யவில்லை கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை இலக்கிய இலக்கண இரசிகர்களாக்கிய விடாமுயற்சி மகாலிங்கசிவத்தையே சாரும்,

பண்டிதமணி அவர்களுக்கு ஆத்திசூடி, பழமலை யந்தாதி பாடம்பண்ணியவரும் மகாலிங்கசிவமே. நாவலர் பாடசாலையின் காவிய பாடங்களில் ஆற்றுப்படுத்தியவரும் அவரே.

மகாலிங்கசிவத்தின் ஆற்றல் மிக்க பேச்சுக்கள் நகைச்சுவை ததும்பப் பெருகுவன. எவ்வித ஆயத்தமும் இல்லாமல் அவர் பேசியவை ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தையும், கலாநிலையத்தையும் அக்காலத்திற் தூக்கிவிட்டன. காளிதாச மகாகவியின் சாகுந்தலத்தில் ஈடுபாடுகொண்ட அவரின் புதல்வி ஒருத்தி கலாநிதி நடேசபிள்ளை அவர்கள் செய்த சகுந்தலை வெண்பாவைப் பார்வையிடும் பாக்கியம் செய்தவளாயினுள் என்றுல் மகாலிங்கசிவத்தின் தமிழ் ஊறல் எங்கே. சிவத்தின் மைந்தன் பார்வதிநாத சிவத்தின் பாடல்களைப் பண்டிதமணி அருமையாக விமர்சனம் செய்துள்ளார். படித்துப் பார்த்துப் பழைய ஊறலை உணரலாம்.

## பிதிர்த் தேவதைகளுக்கான தினம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்களைச் சுவர்க்க நரகத்தில் அனுபவிக்கும். சுவர்க்கத்திலே இன்பங்களை அனுபவிக்கும்போது அச்சூக்குமசரீரம் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுகிறது. அது பஞ்சபூதங்களின் சாரங்களினுல் ஆக்கப்பட்டது. ஆதலின் அது பூதசார சரீரம் எனப்படும். தேவசரீரம் எனப்படுவதும் அதுவேயாகும். நரகத்திலே துன்பங்களை அனுபவிக்கிற சூக்கும சரீரமும் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றது. அது நோய் கொண்டதாயும். எவ்வகைத் துன்பங்களையும் தாங்கவல்லதாயும் இருக்கும். அது யாதனு சரீரம் எனப்படும். இவ்விதம் அனுபவித்துத் தொலையாமல் எஞ்சி நின்ற (பிராரத்துவ) வினைகளினுலே மீண்டும் பூமியில் வந்துபிறக்கும்.

### பிதாவுயிரும் பாட்டனுயிரும் முப்பாட்டனுயிரும்

இறந்தவர்களுடைய தூலவுடம்பும் சூக்கும்வுடம்பும் பிறவிக்குக் காரணமான வினையுமெனப்பட்டவெல்லாம் தகனக்கிரியை, அந்தியேட்டி இவற்றுல் நீங்கிவிடும். அபுத்திபூர்வமாகச் செய்தன அந்தியேட்டி தகனக்கிரியைகளால் மாறும். புத்தி பூர்வமாகச் செய்தன அனுபவித்தேயாக வேண்டும். உயிர், சபிண்டீகரணம் (பிதிர்பூசை) என்னும் கிரியையினுலே சிவலோகத்தையடையும். அங்கு பிதாவினுடைய உயிர் ஸ்கந்த சொரூபமாக இருக்கும் பாட்டனுடைய உயிர் சண்டபதத்திலே சண்ட சொரூபமாக இருக்கும். முப்பாட்டனுடைய உயிர் சுணுதீசபதத்திலே சுணுத சொரூபமாக இருக்கும். இவர்களுக்குத் தலைவர்களாக ஸ்கந்த சண்ட, சுணுதீதர் என்னும் மூவர் அதிதெய்வங்களாக விளங்குவர். இவர்கள்தான் பிதிர்த் தேவதைகள் என அழைக்கப்படுவர். இவர்களைப் பிரீதி செய்து வழிபடுவதுதான் சிராத்தம் எனப்படும். நிருவாண தீட்சை பெற்றவர்களுடைய பிதுர் தேவர்கள், ஈசர். சதாசிவர் சாந்தர் எனப்படுவர்.

### சிராத்தத்தின் தேவை

மண்டலங்கள். சூரியமண்டலம், சந்திரமண்டலம், மேக மண்டலம், பூமண்டலம் எனப் பலவகைப்படும். இறந்து போன உயிர்கள் தாம்செய்த புண்ணிய பாவத்திற்கேற்பச் சுவர்க்க நரகங்களையடைவனவும், முத்தியடைவனவுமன்றிச் சில உயிர்கள் உடனே ஒரு தூலதேகத்தை எடுப்பனவுமாகவும் இருக்கும். அன்றி அவை இறக்கின்ற காலநேரங்களைப் பொறுத்ததாக: உயிர்களை நற்பதவியடையச் செய்தலுக்குச் சிராத்தம் இன்றியமையாததாகும்.

### பிதிர்லோகம்

சூரியனும் சந்திரனும் ஒன்றுபட்டுப் பூமிக்கு நேரே நேர்படுஞ் சமயமே சிரார்த்தத்திறகு மிகவுஞ் சிறந்தது. ஒவ்வொரு அமாவாசையும் பிதிர்கருமத்திற்கு விசேடமானது. எனினும் ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் விசேடமுமானதாகும். தை அமாவாசையும் சிறந்தது. ஏனெனில் சூரியமண்டலத்துக்கு அப்பாலுள்ள இடம் பிதிர்களுக்குரிய இடமாகும். இது பிதிர்லோகம் எனப்படும். வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் சூரியன் தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் ஆரம்பகாலம் ஆடிமாசமாகும். ஆகவே ஆடி அமாவாசை பிதிர் தருப்பணத்திற்கு மிகவும் சிறந்த காலகும்.

அமாவாசை, பெளர்ணமி நாட்களில் கடலிலே தீர்த்தமாடுதல் மிகவும் நல்லது. கடல்நீரை நமது பாபத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும், இறைவனது அருள் நீராகவும் நினைந்து காலஞ்சென்ற பிதிரர்களை எண்ணி அவர்களது பாவத்தைப்போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் வேண்டும்.

### கடல்நீராடுதல் அவசியம்

உடல் நலத்தின் பொருட்டும் கடல் நீராடுதல் நன்மையாகும். அமாவாசை, பெளர்ணமி நாட்களில் கடலின் நிலையும் நமது உடலின் நிலையும் மாற்றமடைகின்றது. கடல் நீராடுவதனுல் அநேக உள்ரோகங்களும், புறரோகங்களும் சுகமடைகின்றன. நீராடினுல் சரீரம் சுத்தமாகின்றது. ஆரோக்கியம், உற்சாகம் என்பன உண்டாகின்றன. மன ஒருமைப்பாடும் மனப்பரிசுத்

[7-ம் பக்கம் பார்க்க]

## விளையாட்டுப் போட்டி

(ஆனையிறவு)

ஆனையிறவு அரசினர் தமிழ்-சிங்களக் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது

பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரி திரு நா. தணிகாசலம்பிள்ளை, ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன வட பிரதேச முகாமையாளர் திரு எஸ் வேலாயுதபிள்ளை, உற்பத்தி முகாமையாளர் திரு. ரி. ஸ்ரீ இராமநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பச்சை, மஞ்சள் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் மஞ்சள் இல்லம் 280 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், பச்சை இல்லம் 190 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன.

## ஒய்வுபெறும் பதில் அதிபர்

கல்வியின் உயர்ந்த இலட்சியங்களை உள்ளே இருத்தி கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் 36 ஆண்டுகள் ஒப்புயர்வற்ற சேவை செய்த திரு. ஆ. சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் ஓய்வுபெற்றார்.

இப்பாடசாலையின் பழைய மாணவரான இவர் இங்கு உதவி ஆசிரியராக, உப அதிபராகப் பதவிவகித்தார். சில காலம் பதில் அதிபராகவும் பணிபுரிந்தார்.

அதிபர் பதவியைத் தொடரவிரும்பாமல் இக்கல்லூரிக்கேற்ற சிறந்த அதிபர் ஒருவரை இங்கு கொண்டு வருவதில் இவர் எடுத்த முயற்சிகள் இவரது கல்விப்பணிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

'ஆட்டிஸ்ற்' என்றுபலரரலும் அன்புடன் அழைக்கப்படும் திரு சுப்பிரமணியம் மாதிரி உருக்கள், வரைபடங்கள் மூலம் தமது உள்ளத்து இருக்கைகளை மாணவர்மனதில் புகுத்துவதில் வல்லவர்.

தமது இடத்திற்கு வேறொருவர் நியமிக்கும்வரை இலவச சேவையை ஆற்ற முன்வந்துள்ள இவர் போன்றோர் ஆசிரியர் உலகத்தில் ஆயிரத்தில் ஒருவரே!

சிவம்—ஜெபம்

## தமிழ் மன்றம்

(யாழ்ப்பாணம்)

''மாணவ - மாணவிகள் சிறுவர்களுடன் ஆரம்பித்த வதிரி தமிழ்மன்றப் படிப்பகம் இன்று பெண்கள், வளர்ந்தோர் உள்ளடக்கியதாக 500 உறுப்பினர்களைக் கொண்டதாக வளர்ந்துள்ளமை ஒருபெரும் சாதனை என்றே கொள்ள வேண்டும்''. என்று வதிரி தமிழ் மன்றத் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு கலோகேஸ்வரன் சங்கஆதரவில் இயங்கி வரும் தமிழ் மன்ற படிப்பகத்தில் இடம் பெற்ற வைபவமொன்றில்பேசுகையில் குறிப்பிட்டார். திரு வேலன் கதிர்காமவேல் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## அலைமகள் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையின் உப அதிபர் திரு ச. அம்மையப்பர் தலைமையில் நடைபெற்றது.

இவ் விளையாட்டுப்போட்டியில் அலைமகள் இல்லம் 464 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தை பெற்றது.

சிறந்த விளையாட்டு வீரனாக செல்வன் அ. பிரபாகரனும், சிறந்த வீராங்கனையாக செல்வி தி.மதிவதனியும் தெரிவாகினர்

இப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றீட்டிய மாணவர்ளுக்கு பாடசாலை அதிபர் திரு மு. நீலகண்டன் பரிசில்களை வழங்கினர்.

## மெய்வல்லுநர் போட்டி

(வேலணை)

வேலணை கல்வி வட்டார பாடசாலைகளினது உடற்பயிற்சிப் போட்டியும் மெய்வல்லுனர் போட்டி 16,ம் 7-ம் திகதிகளில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு வேலணை கல்வி வட்டார அதிகாரி திரு பொன். கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

## இன்றைய பலன்

மாதம்—ஆனி

தி தி—31 (85-7-15) திங்கள்

திதி—திரயோதசி பின்இரவு வரை

நக்ஷத்திரம்— மிருகசீரிடம் முழுநாளும்

மேடம்;- தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். வாழ்வுப் பாதையில் வளமான திருப்பங்கள் தென்படும். கடல் கடந்த பிரயாணத்திற்கும் இடமுண்டு.

இடபம்:- பொருளாதார நிலை சீரடையும் சிலருக்கு எதிர்பாராத வரவிற்கும் இடமுண்டு வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்:- அதிக ஆசையினல் அவஸ்தைப்படுவீர்கள் சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம் அமைதி நன்று.

கடகம்:- பெரிய இடத்துச் சிநேகம் இன்று ஏற்படலாம். புதுவழிகளின் மூலம் பணம் கிடைக்கும். குடும்பதிதிலும் மகிழ்ச்சியுண்டு.

சிங்கம்:- உறவு முறைகளில் பிளவு தென்படும் மனதில் உற்சாகம் குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்

கன்னி:- வாகனச்சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்தி காணப்படலாம் தாய்வழி மூலம் தனலாபமும் உண்டு

துலாம்:- தெளிந்த மனம் தெய்வசித்தம் தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

விருச்சிகம்:- குடும்பத்தில் சிறு பிணி வாட்டும் இதன் மூலம் வைத்திய செலவுகளும் ஏற்படலாம் கடமையில் அதிக கவனம் செலுத்தவும்.

தனுசு:- காதலர்களுக்கு கற்கண்டான தினம் குடும்பத்தில் குதூகலம் தென்படும் உறவினர்கள் ஆதரவும் உண்டு

மகரம்:- தென்றலும் தீயாக மாறும் குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம் உணவுவிடயத்தில் கவனம் செலுத்தவும்.

கும்பம்:- உங்கள் நடவடிக்கையில் தனிச் சிறப்புத்தென்படும் பெரியவர் ஒருவர் கைகொடுத்து உதவுவார்.

மீனம்:- இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்கள் ஆதரவுமுண்டு செய்தொழிலாலும் சிறப்புண்டு.

திருமலை

வே. ரவீந்திரன்

## பிதிர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

...மும் உண்டாகின்றது. அதிக பசியுமுண்டாகிறது. ஆதலின் இடையிடையே கடல் நீராடுதல் அவசியமாகும்.

### மாதருறவும் மக்கட்பேறும்

அமாவாசைநாளில் மாதரோடு இன்பந்துய்த்தல் மாபாவமெனக் கூறப்படுகின்றது. ஆத்மகாரகனான சூரியனுடன் மனத்தின் காரகனாகிய சந்திரன் ஒருங்கே கூடியிருக்கும்பொழுது மானிடரின் ஆத்தம சக்தி குன்றியிருக்கும். மாதரின் மனமும் மிகவும் சோர்ந்திருக்கும் இதனை மீறி இன்பந்துய்த்தால் அங்கவீனமுள்ள- ஆண் பெண்ணற்ற, அலிகள் போன்ற குழந்தைகள் பிறப்ப எனச் சொல்லப்படுகிறது. இதனை விளக்கும் பாடல் வருமாறு;

'காலற்றன உடலற்றன தலையற்றன நாளில்
கோலக் குய மடவார் தமைக்கூடின் மலடாவர்
மாலிக்கொரு கோயில்செயின் அதுவும் வெகுபாடாம்
ஞாலத்தவர் வழிபோமின் நலமுய்துடாரவமே பயன்''

பெண்ணோடு கூடுதற்கு விலக்கிய துதியினைப் பின்வரும் பாடல் கூறுகிறது.

''தையலை முதலாந் திதி தனிற் கூடில்
அன்பறுஞ் சட்டியே விரோதம்
பொய்யிலட்டமி நோய் நவமியிற்றுக்கம்
பொருந்துமே காதசி தனின்
மருவிடிற் பூமியின் மருவான்
மெய்யினோர் புகழுஞ் சதுர்த்தசி தன்னின்
மேவிடினோயென விதிப்பார''

பிரதமை — அன்புநீங்கும், சட்டி—விரோதம்; அட்டமி—நோய்; நவமி—துக்கம்; ஏகாதசி—பாவம்; துவாதசி—பூமியில் வாழான்; சதுர்த்தசி—நோய்.

இச் செய்யுளிலிருந்து தினங்களின் வீறு புலனாகின்றது. ஆதலின் ஆடி அமாவாசைப் புண்ணிய தினத்திலே மூர்த்தி தலம், தீர்த்தம் அமைந்த புண்ணிய சலங்களிலாயினும் வீடுகளிலாயினும் பிதிர்கருமங்களை முறைப்படி செய்தல் (பிண்டம் போடுதல்) இன்றியமையாததொன்றாகும்.

## நினைவலைகள்



நல்லூர் கந்தசுவாமி கோவில் பிரதம குருவாகவும் வயல்வேளிக் கந்தசுவாமி கோவில், பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் ஆகியவற்றின் பிரதம குருவாகவும் இருந்த சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் சிவபதமடைந்து ஒருவருடமாகிவிட்டது. சென்ற 12-7.84-ல் அவர் மறைந்தார். அவரின் அன்பான பேச்சுக்களையும் மனதைக் கவரும் ஆறுதல் வார்த்தைகளையும் யாரும்மறந்துவிடவில்லை

நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத் திருவிழாக்களை நடத்தி வந்த குருக்களவர்கள் தமது மனைவியார் இறந்தபின்னர் முருகனை அலங்கரிக்கும் பணியில சாத்துப்படியில் ஈடுபட்டார் பொன் நகைகளைப் பொறுப்புடன் பூணுவித்து முருகனை அலங்கரித்தார். முருகனும் வள்ளி தெய்வானையும் பரிவார மூர்த்திகளும் வீதிவலம்வரும் திருக்கோலக்காட்சியை எவரும் மறந்திருக்க முடியாது அலங்காரப்பிரியரான வகர்விகுருக்கள் முருகனை மாத்திரமல்ல, தன்னையும் அலங்கரித்துக்கொள்வார் ஒரு குருக்கள் எப்படி அலங்கரித்துக்கொள்ள வேண்டுமோ அவ்விதமே - அந்த நியதிக்கமையவே தன்னை அலங்கரித்துக் கொள்வார் சிவர் சங்கமும் உருத்திராக்கமும் மணிமாலைகளும் அவர்நெஞ்சை அலங்கரிக்கும்.

சமஸ்கிருதத்தை அவர் துறைபோகக் கற்றவர் கிரியைகளை முறையாகச் செய்யக் கூடியவராயிருந்தார். எல்லா மந்திரங்களையுமே மனனம் செய்து வைத்திருந்தார். கொடியேற்றம் கொடியிறக்கம் போன்றவற்றை பத்ததி இல்லாமமே எல்லா மந்திரங்களையும், சுலோகங்களையும், தியானங்களையும் மனப்பாடமாகவே சொல்லிச் செய்கின்ற ஆற்றல் படைத்தவராயிருந்தார் பத்ததி வாசிப்பவரின் உதவி இன்றியே திருவிழாக்களை நடத்திமுடித்தவர் இவர் ஒருவரே!

நல்லூர் கந்தனின் உற்சவ காலங்களில், முருகனின் முகத்திலிருந்து வீசும் அருள்ஒளி அலையிலும் ஆலயமணியின் ஒலி அலையிலும், அலை அலையாகமோதும் மக்கள் கூட்டத்தின் மனதிலும் குருக்கள் அவர்களின் நினைவு அலைகள் நிட்சயம் மிதக்கும்!

தனக்கென வாழாத இந்தப் பெருந்தகையின் நின்று நிலவும் நினைவாலயமாக பாலகதிர்காமம் திகழும் ஏன் அவருடன் பழகிய ஒவ்வொருவரின் நெஞ்சமுமே நினைவாலயந்தான்!

—இர. சந்திரசேகரன்—

## யுவதி தற்கொலை

(மாவிட்டபுரம்)

வீடொன்றில் உதவியாளராக இருந்த 14 வயது யுவதி ஒருவர் நஞ்சருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

வவனியாவைச் சேர்ந்த சண்முகம் சுலோசனு என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.


மாவிட்டபுரத்திலுள்ள வீடொன்றில் உதவியாளராக இருந்த காலஞ் சென்றவர் வீட்டு வேலைகளில் கவனம் செலுத்தாமையால் எஜமானி கண்டித்ததாகவும் இதனல் மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரிய வந்தது

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா தம்பிராசா விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

மாவிட்டபுரம் கிராமசேவையாளர் திரு.கனகநாயகம் விசாரணைக்கானஏற்பாடுகளைச்செய் திருந்தார்.


காணவில்லை

## உருக்கமான வேண்டுகோள்



வவனியா - ஆசிகுளத்தைச் சேர்ந்த திரு சரவணமுத்து செல்வநாயகம என்பவரை 25-6-85 செவ்வாய்க்கிழமை தொடக்கம் காணவில்லை. இவர் அன்றையதினம் முல்லைத்தீவுக்கு விபயாத்திற்காக சென்றிருந்தார், இவர் அச்சுவேலி - கதிரிப்பாய் என்னும் இடத்தில் திருமணம் செய்துகொண்டவர்: காணமல் போன அன்று வெள்ளைநிற சேட்டில் பிறவுண் கலர் கோடுஇட்டதும் பச்சைநிற சாரமும் அணிந்திருந்தார். இவரைக் கண்டவர்கள் அல்லது இவரைப்பற்றிப தகவல்கள் ஏதும் தெரிந்தவர்கள் கீழ் வரும் விலாசத்திற்கு தயவுசெய்து தகவல் தருப்படி தயவுடன் வேண்டுகின்றோம.

தகப்பன் மா சரவணமுத்து,
ஆசிகுளம், வவனியா.

4452

# 1வது ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி றெஜினு சந்தியாப்பிள்ளை

16-7-85
செவ்வாய்க்கிழமை
காலை
அன்னாரின்
ஆத்ம சாந்திக்காக
யாழ். ஆசனக்
கோவிலிலும்,
சந்தியோமையோர்
கோவிலிலும்
துக்கப்பாடற்
பூசைப்பலி
ஒப்புக்
கொடுக்கப்படும்.



உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15, 6-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 4389

---

# 2-வது ஆண்டு நினைவு அஞ்சலி



## திருமதி தவமணி சோமலிங்கம்

| மலர்வு: | உதிர்வு: | திதி: |
|---|---|---|
| 8-6-1930 | 6-8-1983 | 15-7-1985 |

அன்னையே! கண்ணை இமை காப்பதுபோல் காத்து நின்றாய். இன்று எம்மை விட்டு விண்ணுலகம் சென்று ஈராண்டாகிலும் எம் நெஞ்சங்களில் நின் நினைவுகள் என்றும் நீங்கா.

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்புக் கணவன், மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

"மணி இல்லம்",
265, ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 4439

---

# கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்
## பரந்தன்
## பதவி வெற்றிடம் — கணக்காளர்

சம்பள அலகு — 104 8 — 500 — 840 / 20x5 — 30x8

மேற்படி சம்பள அலகில் கணக்காளர் பதவி வெற்றிடத்துக்கு கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 27-07-1985 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக 'பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

### தகைமைகள்

ஏ. கணக்குப் பதிவாளர் / கணக்கு லிகிதர் / கணக்காய்வு லிகிதராக கூட்டுறவு ஊழியர் 9வது சம்பள அலகில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கணக்குப் பதிவாளர் / கணக்கு லிகிதர் / கணக்காய்வு லிகிதராக கூட்டுறவு ஊழியர் 10வது சம்பள அலகில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

பி. ஐக்கியராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு / கணக்காய்வு துறையில் மேற்பார்வை தரத்திலான 3 வருட அனுபவம் அல்லது ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் / வர்த்தக நிறுவனமொன்றில் கணக்கு / கணக்காய்வு துறையில் மேற்பார்வைத் தரத்திலான 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

சி. கூட்டுறவு ஊழியர் தராதரப் (உயர்தரம்) பத்திரம் / க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 3 பாடங்களில் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் / வர்த்தக நிறுவனமொன்றின் கணக்கியல் / கணக்காய்வு துறையில் மேற்பார்வையாளர் தரத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

தி: தி: 12 07-85. (4402)

---

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் இல. 122, இராசாவின் தோட்டம் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற அருளம்பலம் குலசேகரம் என்பவரது மரண சாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவரி
வழ. இல: ரி/3892

டாக்டர். வேலுப்பிள்ளை கிருஷ்ணராஜ், இல. 122, இராசாவின் தோட்டம்; யாழ்ப்பாணம்.

— மனுதாரர்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 2-ம் நாளன்று காலை 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்
மனுதாரரின் சட்டத்தரணி.

4410

---

# பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மரண சாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற புலோலி மேற்கு ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை பெண் சிவபாக்கியத்தின் சொத்து விடயமாக

இறந்தவர்
ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை,
புலோலி மேற்கு,
மனுதாரர்.

T/1218

எதிர்

1. கணபதிப்பிள்ளை மாணிக்கம்
2. கணபதிப்பிள்ளை இராசரத்தினம் இருவரும் புலோலி மேற்கு

பிரதிவாதிகள்.

மேற்குறித்த இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காகக் குறித்த நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 23ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ச. நடராசா,
பதிவாளர்.

வரைவு:
வ. கு. கணபதிப்பிள்ளை,
மனுதாரரின் சட்டத்தரணி

4355

---

# மில்க்வைற் ஆதரவாளர்களுக்கு ஓர் நற்செய்தி!




சுப்பமில்க்வைற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரியத்தருகின்றோம்.

**பழைய விலை ரூ. 7-00**
**புதிய விலை ரூ. 6-75**

'உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம் உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு கொடுப்போம்.'

2 சுப்பமில்க்வைற் மேலுறைகளை அனுப்பி
1 செய்தி இதழைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற்—யாழ்ப்பாணம்

---



# 1-வது ஆண்டு நினைவு அஞ்சலி

திரு. த.
சின்னக்கண்டு
(இ. போ. ச.
நடத்துநர்)
தோற்றம்:
04-08-1930
மறைவு
26-06 1984
திதி:
15-07-1985

எங்கள் அன்புத் தெய்வமே, எங்களை எவ்வித குறையும் இன்றிக் கண்ணை இமை காப்பது போலக் காத்து வந்தீர்கள். விதியின் விளைவால் நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டாகிறது. உங்கள் பிரிவால் துன்பக் கடலுள் தத்தளிக்கின்றோம். எம் நெஞ்சங்களில் நீங்கள் என்றும் தெய்வமாக நிலைத்துள்ளீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, புதல்வர்கள்

பத்தாவத்தை,
இளவாலை. 4390

---

கல்வித் திணைக்களம் — கிளிநொச்சி

# பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சிக் கல்வித் திணைக்களப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகிய என்னால் கிளிநொச்சி கல்வி மாவட்டத்தில் கீழ்க் காணும் நிர்மாண வேலைகளுக்கான கேள்விகள் 1985-08-08ந் திகதி மு. ப. 9 30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலையின் தன்மை | கோரப்படும் பதிவுத் தொகை |
|---|---|---|
| ஆனையிறவு அ. த. க. பா. | பெரிய திருத்த வேலைகள் | 100,000/- |
| கனகபுரம் அ. த. க. பா. | பெரிய திருத்த வேலைகள் | 100,000/- |

ஒப்பந்த வேலைக்கான பதிவை உறுதிப்படுத்தும் ஒப்பந்தக்காரருக்கு 1985-07-23ந் திகதி மாலை 3-00 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் கிளிநொச்சிப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளரின் பேரில் கிளிநொச்சிக் கச்சேரியில் ரூபா 125/-ஐ வைப்புப்பணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அரக்கு முத்திரை இடப்பட்ட உறையில் அனுப்பப்படுவதோடு ஒவ்வொரு வேலைக்கும் புறம்பான உறை உபயோகிக்கப்பட வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரத்தையும் பாடசாலையின் பெயரையும் குறிப்பிடவும். கேள்விப்பத்திரங்கள் 08-08-85 காலை 10-30 மணிக்குத் திறக்கப்படும். ஏனைய விபரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எம் எம். மன்சூர்,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி, 1985-07-11. 4448

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p. m.
"SPLASH"
(2 நாட்கள் மட்டும்)
16-7-85 தொடக்கம்
Jack Lemmon
Sissy Spacek
Missing
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

பாலகன்
வீடியோ விஷன்
சாந்தி சினிமா முன்பாக
தினசரி 10-30, 2-30. 4-30. 6-30. 9-30
Richard Roundtree in
Shaft in Africa
(Adults only)
கறுப்பு இனத்தைச் சேர்ந்த ஒருவன் தனது இனத்தை காப்பாற்ற எடுக்கும் முயற்சியும் அவனை காதல் வலையில் சிக்கவைப்பதற்கு கன்னியர் படும் பாட்டையும் கண்டுகளிக்க இன்றே பாருங்கள்.
[கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்]

வெலிங்டன்
10-30 — 2-15 — 4-15
Night Shift
நாளை முதல்
10-30. 2-15. 4-30, 6-45 9-00
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்]
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15. 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம் பூர்ணிமா, ஜெயராம், சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30 6-30, 9-30
Real BRUCE LEE in
The Invisible
கராட்டி சண்டைப்படம் இதுவரை யாழ்ப்பாணத்தில் எந்தத் திரையரங்கிலும் திரையிடப்படாத கராட்டிப் படம்.

நியூ சாந்தி மினி
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-30, 6-30
Grave Of The VamPire
SEX DRAGULA
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

சோபிகா மினி
(பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 மட்டும்
சிவாஜி - கே ஆர். விஜயா
மனோகரி
சொர்க்கம்
5-30
Onas, Nest
(பயங்கர துப்பாக்கிச் சண்டைகள், ஜெருக்கட் தாக்குதல் நிறைந்த படம்)

வின்ஸர்
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30, இரவு 6-00
GANDHI
காந்தி அடிகள்
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க செவ்வாய்க்கிழமை (85-07-16) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேபெயர் மினி
(கன்னாதிட்டி)
10-30 a. m.
Guns of Navarone
War Film
மாலை 2-30, 6-30
பிரதாப், சுமலதா நடித்த
சொல்லாதே யாரும் கேட்டால்
திகிலூட்டும் சம்பவங்கள் நிறைந்த படம்.

சரவணபவன் மினி சினிமா
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கு மிடையில்)
★ யாழ். நகரிலேயே நவீனமயப்படுத்தப்பட்ட அரங்கம்
★ சகல செளகரியங்கள்
★ மகளிரும் பார்க்கக்கூடிய தனித்துவ வசதி
★ தெளிவான ஒரிஜினல் பிரதிகள்
★ தினசரி 4 காட்சிகளுடன்
அமைதியான சூழலில் ஆனந்தமாகப் பார்த்து மகிழ்ந்திட...
இன்று முதல் (15-07-85)
10-30 A M
நவகிரகநாயகி
(தென்னகத்து முன்னணி நட்சத்திரங்கள் இணைந்து வழங்கும் புராண காவியமிது
2 30 p m.
4 30 p m.
7 00 p m.
007 SEAN CONNERY IN
From Russia With Love

## ப.நோ.கூ.சங்க கிளைக்குழு

(ஊரெழு)

அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களுக்கான தேர்தலில் குப்பிளான் கிளைக்குழு உறுப்பினர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள் அ.சிவஞானசுந்தரம் (தலைவர்) சி பஞ்சலிங்கம், ஆ ஸ்ரீஸ்கந்தவேல், மா. சின்னத்துரை, ச பொன்னம்பலம், அ குமரகுருபரன், நா. நந்தகோபால், ந வைரவநாதன், ச. மயில்வாகனம்.

## சர்வதேச

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற பெரு நிலப்பரப்பில் பிற்போக்கு ஆட்சிக்கெதிராக கிளர்ச்சி தோன்றுவதும் மாஸ்கோ அதன் உதவிக்கு விரைவதும் இன்றைய பயங்கரவாதமென்னும் மந்திரத்துக்கு வழிவகுக்கிறது. அரசியல், பொருளாதார அடக்குமுறைக்கு எந்தநாட்டின் சூழப்ப நிலையும் தூபமிடுகின்றது அதற்கு இன்றைய நவீன ஆயுதப் பலம் உதவுகின்றது.

இந்த வட்டத்துக்குள் இந்தியாவையும் இலங்கையையும் இழுத்துப்போடும் சூழ்ச்சியே இன்று எம்மைப் பாதிக்கிறது.

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-00, 6-45
தியாகராஜன், நளினி விஜய்காந்த், விஜி
நல்ல நாள்

ஸ்ரான்லி மினி
5X5 திரையில்
10-30, 2-30, 6-00
ரஜனி - சுஹாஷினி நம்பியார் - அனிதாராஜ்
தேவர் பிலிம்ஸ்
தாய்வீடு

உஷா மினி
(கே கே. எஸ். வீதியில்
தினசரி 10-30, 2-30 4-30, 6-15
Debra Blee in
The Beach Girls
வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

பவித்ரா மினி
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30 2-30, 4-30, 6-30
Honest Nest வரிசையில்
THE INGLORIOUS BASTARDS

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30 2-30 6-30
எம்.ஜி ஆர்., ஜெயலலிதா
மாட்டுக்கார வேலன்
—கலர்—

மொடேர்ண் மினி சினிமா
தினசரி 3 காட்சிகள்
Richard Harrison in
Intrusion Cambodia
வயது வந்தவர்கள் மட்டும்

குமரன் மினி சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30 5-30.
கமல்-ரஜனி-ஸ்ரீப்பிரியா ஜெயசித்ரா நடித்த ஸ்ரீதரின்
இளமை ஊஞ்சலாடுகிறது

## விமான விபத்துக்களில்
# முதல் ஆறுமாதத்தில் 913 பேர் மரணம்

(லண்டன்)

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதகாலத்தில் விமான விபத்துக்களில் மொத்தம் 913 பேர் பலியாகியுள்ளனர். ஆனால் 1984ம் ஆண்டு முதல் ஆறுமாதகாலத்தில் 450 பேர் மாத்திரமே பலியாகியிருந்தனர் இதனால் இந்த ஆண்டு விமானப்பயணங்களுக்கு மிகவும் பாதுகாப்பு குறைந்த ஆண்டு எனக் கூறப்படுகின்றது.

இத்தகவலை லண்டனிலிருந்து வெளியாகும் "பிளேய்ட் இன்டர்நாஷனல்" என்ற பிரிட்டிஸ் விமானபயணச் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு விமான விபத்துக்களை ஒப்பிடும் போது விமானப் பயணங்களுக்கு பாதுகாப்பு குறைந்ததொரு ஆண்டு இவ்வாண்டாகும். இந்தவிமான விபத்துக்கள் இந்தியா போயிங் கனிஷ்கா விமானவிபத்து பாரதூரமானது என்றும் குறிப்பிட்டிருந்தது.

## "சமுதாய பணிசெய்வோர் இறைவனின் சேவையாளரே"

(கரவெட்டி)

"மக்கள் சேவையே மகேசன் சேவையென்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். மக்களின் தேவைகளுக்காகச் சமுதாயப் பணியில் தம்மை அர்ப்பணித்தவர்கள் இறைவனுக்குச் சேவையாற்றியவர்களே".

இவ்வாறு சென் ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவின் உடுப்பிட்டித் தொகுதித் தொடர்பு அலுவலர் திரு ந. ஆனந்தராஜன் கரவெட்டி ஸ்ரேபர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்குடன் கரவெட்டி மத்தியில் திறந்து வைக்கப்பட்ட இப்படைப்பிரிவின் முதலுதவி நிலையத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. வீ. எஸ். வீரசிங்கம் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

திரு. அனந்தராஜன் மேலும் பேசுகையில், 'சமுதாயத்தின் அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நற்பணியாற்றும் சமூக நல அமைப்புகளுக்கு ஆதரவளிக்க வேண்டியது நமது கடமையாகும், என்றார்.

## உடுப்பிட்டி நூலகம் இன்று திறக்கப்படும்

(புலோலி)

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உடுப்பிட்டி உப-அலுவலகத்தினால் சுமார் 1,25,000 ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட உடுப்பிட்டி பொதுசன நூலகம் இன்று திறந்துவைக்கப்படுகிறது

இப் புதிய நூல்நிலையத்தில் சுமார் 25,000 ரூபா பெறுமதியான நூல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்புதிய நூலகத்தின் நூலக உதவியாளராக திரு. எஸ். சிவயோகேஸ்வரன் கடமையாற்றுவார்.

## ஆறு தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புக்களின் சார்பில் கூட்டறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதிகார பரவலாக்கல் சம்பந்தமாக திரு எச். டபிள்யூ. ஜயவர்தன மகாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் சமர்ப்பித்த ஆலோசனைகளை நிராகரித்தே இந்த கூட்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது

தமிழ்ஈழ விடுதலைப் புலிகள், ஈ பி ஆர். எல். எவ், ரெலோ, புளட், மற்றும் த வி, கூட்டணி ஆகிய ஆறு அமைப்புக்களின் சார்பில் அறிக்கையை புளட் அமைப்பின் பிரதிநிதி திரு. சார்ள்ஸ் மகாநாட்டில் சமர்ப்பித்தார்

தமிழ் மக்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் விதத்தில் இலங்கை அரசு புதிய ஆலோசனைகளுடன் வந்தால் தமிழ் அமைப்புக்கள் அவற்றை பரிசீலனை செய்யும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரோஸ் எழுத்து மூலம் மறுப்பு

ஜனாதிபதியைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டதான சதிமுயற்சியில் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும் ஈரோஸ் இயக்கத்தின் உத்தியோகபூர்வ கடுமையான மறுப்பை ஈரோஸ் பிரதிநிதி எழுத்து மூலமாக பூட்டான் மாநாட்டில் அன்றைய தினம் சமர்ப்பித்தார்.

இதேவேளை தமக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவே இந்த சதிமுயற்சி நடைபெற்றுள்ளதாக 6 தமிழ் அமைப்புக்களும் கருத்துதெரிவித்தன

## பெரும்போகம் பாதிக்கப்படுமா

(வவனியா)

இம்முறை பெரும் போக செய்கைக்கு விதை உழுந்து, பயறு போன்ற சிறு தானியங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் அறிகுறி வவனியாவில் தென்படுகிறது.

கடந்த செய்கை வன்முறை சம்பவங்களால் பாதிப்படைந்திருந்தது தெரிந்ததே.

இதனால் சிறு தானிய வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் என தெரிகிறது.

ஆம் முறைவிவசாய இலாகா விதைதானியங்களை பெற்றுக் கொடுக்குமானால் விவசாயிகள் பெரும் பயனடைவர்.

## பலாலியிலும் பிரஜைகள் குழு

(மாவிட்டபுரம்)

பலாலி கிராமத்திற்கென பிரஜைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

பலாலி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கிராம சேவையாளர் திரு செ உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரஜைகள் குழு உறுப்பினர்களாக பின் வருவோர் தெரிவாகினர்.

போஷகர்கள் திரு செ உலகநாதன், வண. தேவராஜன் அடிகள், தலைவர். திரு லொறட், உப தலைவர் திரு ஏ. தேவதிரவியம் செயலாளர். திரு ச தனபாலசிங்கம், உப செயலாளர் திரு: ந பாலசிங்கம் பொருளாளர்: திரு சிவபாதசுந்தரம்

நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# பாஸ்போர்ட் பெறுவதற்கு வடக்கிலிருந்து கொழும்புக்கு வருவோரே அதிகம்!

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து பெருந் தொகையானோர் 'பாஸ்போர்ட்' பெறுவதற்காக கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு படையெடுத்துள்ளார்கள்.

கடந்த காலங்களைவிட தற்போது கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு வருவோர் தொகை அதிகரித்திருப்பதாகவும் இதில் முக்கியமாக வட பகுதியிலிருந்து வருவோர் தொகையே கணிசமான அளவு கூடியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புதிய பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பித்தல், சர்வதேச பாஸ்போர்ட் ஆக மாற்றுதல், பாஸ்போர்ட்டின் கால எல்லையை அதிகரித்தல் ஆகிய தேவைகளுக்காக இவர்கள் வருவதாக கூறப்படுகிறது.

கொழும்பு-யாழ்ப்பாணம் ரயில்சேவை ஆரம்பமாகியிருப்பதும் வடபகுதி மக்கள் அதிகளவில் பாஸ்போர்ட் பெற கொழும்பு வருவதற்கு ஒரு முக்கிய காரணமாகும் என்று குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## சேமமடுவில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் இன்று ஆரம்பிக்கப்படும்

(வவனியா)

பனம்பொருள் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் வவனியா-சேமமடு என்ற இடத்தில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்று இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சேமமடு நெசவு நிலையத்தில் இப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படும். 3 மாத கால பயிற்சி நெறி இதுவாகும்.

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. ஸி லோகேஸ்வரனின் ஏற்பாட்டில் பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா இப்பயிற்சி நெறியினை ஆரம்பித்துள்ளார்.

25 யுவதிகள் இதில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டது.

வவனியா திட்டமிடல் பிரிவின் அனுசரணையுடன் இவ் வகுப்பு இடம் பெறுவதாக திட்டமிடல் அதிகாரி திரு ரி. துரைசிங்கம் தெரிவித்தார்.

## கசிப்பை எதிர்த்து நாடகம்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தியால் ஏற்படுகின்ற சமூகச் சீரழிவுகளைச் சித்திரிக்கின்ற தெருக்கூத்து நாடகமொன்றை 'புதுமோடி' நாடக நடிகர்கள் கிராமம் கிராமமாக நடத்தி வருகின்றனர்.

இத்தெருக்கூத்து நாடகத்தை இலங்கை வானொலி பிரபல எழுத்தாளர் வீ. எம். குகராஜா தயாரித்துள்ளார்

'மக்களின் எதிரிகள்' என்று இத்தெருக் கூத்துக்குப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

(மா)

## அதிக விலையில் சோடா விற்பனை; மக்கள் சிரமம்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குறிப்பிட்ட வகை சோடாக்கள் கூடிய விலையில் விற்பனை செய்யப் படுவதால் பாவனையாளர்கள் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

இதுபற்றி விற்பனையாளர்களிடம் கேட்டபோது, குறிப்பிட்ட தாங்கள் சோடா உத்தரவு பெற்ற விற்பனையாளரிடம் சென்று வாங்கும்போது போத்தலுக்கு தலா 50 சதம் கூடுதலாக அறவிடுவதாகவும் இதனால் தாங்கள் போத்தல் லேபில்களில் போடப்பட்டிருக்கும் விலைக்கு விற்கமுடியாமல் இருப்பதாகவும் போத்தல் லேபிளில் போடப்பட்ட கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 50 சதம் கூட விற்கவேண்டி நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் சோடா விற்பனை செய்யப்படுவதை தடை செய்ய யாழ், உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பயிற்சி பெறாத ஆசிரியர்கள் விபரம் கல்வி அமைச்சு திரட்டுகிறது!

[யாழ்ப்பாணம்]

ஆசிரியபயிற்சி பெறாமல் அரசாங்க பாடசாலைகளிலும் தோட்டப் பாடசாலைகளிலும் சேவையாற்றிவரும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை கல்வி அமைச்சு திரட்டி வருகின்றது.

பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்களையும், பயிற்சி பெறாத ஆசிரியர்களையும் மிக விரைவில் பயிற்றுவிக்க வேண்டும் என்ற கல்வி அமைச்சின் எதிர்பார்ப்புக்கமைய மேற்படி விபரங்கள் திரட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் பயிற்சிக்கு ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோருவதற்குப் பதிலாக அதிபர்கள் மூலம் திரட்டப்படும் புள்ளி விபரங்களைக் கொண்டே ஆசிரியர்கள் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

எனவே சகல பாடசாலைகளிலும் இதுவரை காலமும் பயிற்றப்படாத பட்டதாரி ஆசிரியர்கள், ஏனைய பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பற்றிய முழுவிபரங்களையும் சேகரித்து கல்விப் பணிப்பாளர்கள் மூலம் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஈ எல் விஜயமல்ன சகல பாடசாலை அதிபர்களையும் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார்.

[உடுவில் நிரு.]

## மரண அறிவித்தல்

### செல்லப்பா அப்புத்துரை

(முன்னாள் பிரதம லிகிதர் பணில்கந்தை எஸ்டேட் டெனியாயா)

செல்லப்பா அப்புத்துரை காலமானார் இவர் பெருமாளின் அன்புக் கணவரும், சிறீதரனின் [லண்டன்] தந்தையும், வில்லியனின் மாமனாரும், கெவின் கிறிஸ்தபர், நடஷாவின் பாட்டனாருமாவார்

ஈமக்கிரியை அன்னாரின் இல்லத்தில் 16-07-85 செவ்வாய்க்கிழமை பி. ப. 2-00 மணிக்கு நடைபெறும்.

கேசரி ரோட்,
தையிட்டி,
காங்கேசன்துறை.

(4453)

## இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் மஹா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

இவ்வாலயத்தின் கொடியேற்றம் இம் மாதம் 22ம் திகதி இடம் பெறும்.

★ ★

(வண்ணார்பண்ணை)

யாழ் மாநகர சுகாதாரத் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் மருத்துவ சிகிச்சை நிலையங்களில் ஒன்று யாழ்ப்பாணம் கண்டிரோட் புறூடி ஒழுங்கைக்கு அண்மையில் இன்று காலை திறந்துவைக்கப்படவிருக்கிறது.

யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானம் இதைத் சம்பிரதாயப்படி திறந்துவைக்கவுள்ளார்.

★ ★

(வண்ணார்பண்ணை)

பனைஅபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்களை ஆராயும் கருத்தரங்கொன்று இன்று திங்கட்கிழமை எழுவைதீவில் நடைபெறவிருக்கிறது இதுதொடர்பானஏற்பாடுகளை தீவுப்பகுதி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு கே. பாலசிங்கம் செய்துள்ளார்

எழுவைதீவில் பனம்பொருள் உற்பத்தி பயிற்சிநிலையம் ஒன்றும் இன்று ஆரம்பிக்கப் படவிருக்கின்றன. எழுவைதீவு கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் இப்பயிற்சி நிலையம் நடைபெறவுள்ளது.

இன்று எழுவைதீவில் நடைபெறவிருக்கும் மேற்படி செயற்பாடு தொடர்பான கருத்தரங்கில் பனைஅபிவிருத்திச் சபையின் இயக்குனர்களான திரு கே. கனகராசா. திரு சி பாலசிங்கம், பொதுமுகாமையாளர் கலாநிதி எஸ் மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

## மரண அறிவித்தல்

### காந்தரெட்டினம் சுரேந்திரகுமார்

காந்தரெட்டினம் சுரேந்திரகுமார் (சுரேந்திரா) அகால மரணமடைந்தார் இவர் காலஞ்சென்ற ராசகோன் காந்தரெட்டிணம் முத்தையா, திருமதி லீலா அவர்களின் அருமை மகனும், ராஜினியின் (உடுவில் மகளிர் கல்லூரி) அருமைக்கணவரும், ரஜிந்தாவின் அன்புத்தந்தையும் திருக்குமார், சார்லட். சாந்திக்குமார் காலஞ்சென்ற டொனல்ட் கணேசகுமார், மனோகரகுமார் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற போதகர் ராஜரெட்ணம், திருமதி ராஜரெட்ணத்தின் மருமகனுமாவார் அன்னாரின் பூதவுடல் கனத்தை சேமக்காலையில் திங்கட்கிழமை 15ம் திகதி காலை 9-30 மணியளவில் அடக்கம் பண்ணப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், சிநேகிதர் ஏற்றுக்கொள்ளவும். 4460

## திருகோணமலைப் பகுதியில்—— விவசாயிகள் அகதிமுகாமில்; வெங்காய செய்கை பாதிப்பு!

(திருகோணமலை)

அநேகமான விவசாயிகள் அகதிகள் முகாம்களில் இருப்பதால் வெங்காயம், மிளகாய்ச் செய்கைகளுக்கு நிலாவெளிக் கிராமத்தில் இம்முறை விவசாயிகள் ஊக்கம் காட்டுவதாக இல்லை.

ஜூனில் இடம்பெற்ற வன்செயல்களின்போது அப்பகுதி மக்கள் பரவலாகப் பாதிக்கப்பட்டதினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட செய்கைகள் இடைநடுவில் கைவிடப்பட்டு விட்டன.

பெரும்பாலானவர்கள் அகதிமுகாம்களில்தான் தங்கி உள்ளனர். (க)

## இளைப்பாறுகிறார்

[யாழ்ப்பாணம்]

மகோவில் கடந்த 8 வருடங்களாக பிரதான புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றிவந்த திரு. ஆர். மார்க்கண்டு இன்றுடன் இளைப்பாறுகின்றார் இலங்கை ரயில்வே பகுதியில் 38வருடகாலம் அவர் பணிபுரிந்துள்ளார். காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் நீலிப்பந்தனை கணபதிப்பிள்ளை ஆறுமுகம், வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த புதல்வராவர்.

## சிப்பி எடுத்தலை தடுப்பதுபற்றி ஆலோசனை

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அரசாங்கதிலங்களில் சட்ட விரோதமாகச் சிப்பி எடுப்பதைத் தடுப்பது சம்பந்தமான ஆலோசனை மகாநாடொன்று இன்று 15ம் திகதி திங்கட்கிழமை பி. ப 1-00 மணிக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## வீதி விபத்தில் 20 பேர் பலி

(டாக்கா)

பங்களா தேஷில் நேற்று நடைபெற்ற வீதி விபத்தொன்றில் 20 பேர் கொல்லப்பட்டனர். என்றும் 30 பேர் படுகாயமடைந்தார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளமொன்றில் விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாம். (து)

## சித்திரச் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

"போர் நிறுத்தம் தமிழனின் சுதந்திரத்துக்கு குழிதோண்டும் நயவஞ்சகச் செயல்" என்ற தலைப்பிலான சித்திரச் சுவரொட்டிகள் யாழ் குடாநாடெங்கும் காணப்பட்டன.

தமிழ் ஈழம் கிடைக்கும் வரை எங்கள் ஆத்மா சாந்தி அடையாது' என்று இறந்த ஆத்மாக்கள் சொல்வது போலவும், எங்கள் கண்ணீர் வீணாகலாமா?" என்று சிறைக்கூண்டுக்குள் இருக்கும் இளைஞர்கள் கேட்பது போலவும் அச்சுவரொட்டி வரையப்பட்டுள்ளது.

'சுதந்திரப் போரைப் பின் போட்டு, சுமையை எங்கள் தலையில் சுமத்திவிடாதீர்கள்' என்று ஏக்கம் நிறைந்த குழந்தைகளின் உருவங்கள்-தென்கொரியா நாட்டிலிருந்து பயங்கர ஆயுதங்களைச் சுமந்துவரும் அமைச்சர் - கட்டப்பட்ட சங்கிலியை அறுத்துப் பாயவுள்ள வேங்கையின் உருவம் ஆகியனவும் சுவரொட்டியில் வரையப்பட்டுள்ளன. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,